பக்கங்கள்: 20

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 03 புனல்:04 20.05.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



ஒருபுறம் கஞ்சி மறுபுறம் கலயம்

இரண்டுக்கும் நடுவே

பதினான்கு வருடங்கள்

அவதானி

பக்கம்
04



ஹரியையும் மனைவியையும்

துரத்திய பப்பராசிகள்

சிலம்பு

பக்கம்
05



# உணர்வுபூர்வமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

படப்பிடிப்பு - குமணன்

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’



# ஆடுகளம் முதல் அரசியல்களம் வரை இம்ரானின் பயணம்

வானதி

கிரிக்கெட் வீரர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக இருந்த இம்ரான்கான் பாகிஸ்தான் அரசியலிலும் எதிரிகளை அச்சுறுத்தி வருகிறார். கிறிக்கெட் எதிரிகள் இம்ரான்கான் மீது கண்டனக் கணைகள் தொடுத்தனர். அரசியல் எதிரிகள் அவரைச் சிறைக்கு அனுப்பினர்.

பாகிஸ்தானின் சர்ச்சைக்குரிய கிறிக்கெட் ஜாம்பவானும் முன்னாள் பிரதமருமான இம்ரான்கான் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு ஓராண்டுக்குப் பிறகு ஊழல் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வாரிசு ஜெமிமா கோல்ட்ஸ்மித்தை திருமணம் செய்த இம்ரான்கான் விளையாட்டு வாழ்க்கையில் விளையாடும் வாழ்க்கை முறையை அனுபவித்தவர். இம்ரான் அஹ்மத்கான் நியாசி 1952 இல் பாகிஸ்தானின் லாகூரில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்தார்.

ஒரு இளைஞனாக, அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்தார், அங்கு அவர் 1975 இல் கேபிள் கல்லூரியில் பட்டம் பெற்றார். அவரது சர்வதேச கிறிக்கெட்டில் பர்மிங்காமில் உள்ள எட்ஜ் பாஸ்டனில் இங்கிலாந்துக்கு எதிராக பாகிஸ்தானுக்காக அறிமுகமானார். 1970களில் கிறிக்கெட் வீரராக சர்வதேச அளவில் பிரபலமடைந்தாலும் இன்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமராக மக்கள் பார்வையில் இருக்கிறார். “ஊழலுக்கு எதிராகப் போராடுவேன்” என்று உறுதியளித்து தேசியவாதியாகப் போட்டியிட்டு 2018 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருப்பினும் ஏப்ரல் 2022 இல் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததால் அவர் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

பொருளாதார மற்றும் அரசியல் தவறான நிர்வாகத்தின் கூற்றுகள் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, பொருளாதாரத்தைப் புதுப்பிக்கவும் ஊழலைச் சமாளிக்கவும் அவர் தவறிவிட்டார் என்று எதிரிகள் குற்றம் சாட்டினர். தன்னை நீக்குவதற்கு அமெரிக்காவுடன் தனது எதிர்ப்பாளர்கள் கூட்டுச் சேர்ந்ததாக இம்ரான்கான் குற்றம் சாட்டினார்.

பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு, ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் ஆஜராகச் சென்றபோது இம்ரான்கான் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கைது செய்யப்பட்டார். 70 வயதான எதிர்க்கட்சித் தலைவரை 14 நாட்கள் வரை காவலில் வைக்க நீதிபதி ஒப்புதல் அளிக்குமாறு கோரப்பட்டது. 8 நாட்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்று நீதிபதி புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

அவர் முறையற்ற விதத்தில் கைது செய்யப்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்தது. அவர் தடுத்து வைக்கப்படுவதற்கு சற்று முன்பு, அவர் பிரச்சாரத்தில் ஈடுபடுவதைத் தடுக்க அதிகாரிகள் அவரைக் கைது செய்ய உள்ளனர் என்ற தலைப்புடன் தெரியாத இடத்திலிருந்து வீடியோவைப் பதிவு செய்தார்.

1996 இல் பாகிஸ்தானின் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சியை நிறுவிய போது ஊழலை ஒழிப்பதாக கான் சபதம் செய்தார்.

இம்ரான்கான் கைது செய்யப்பட்டதால் வன்முறை, ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதுவரை நடந்த வன்முறையில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர், தென்மேற்கு நகரமான குவெட்டாவில் ஒருவர் மற்றும் வடமேற்கு பாகிஸ்தானில் மேலும் மூன்று பேர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலர் காயமடைந்தனர்.





இம்ரான்கான் தனது அரசியல் கட்சியை நிறுவுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு 1995 இல் பிரிட்டிஷ் வாரிசு ஜெமிமா கோல்ட்ஸ்மித்தை மணந்தார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஆனால், ஒன்பது ஆண்டுகள் ஒன்றாக இருந்த பிறகு 2004 இல் விவாகரத்து செய்தனர். பத்திரிகையாளரும் வானிலை தொகுப்பாளருமான ரெஹாம்கானுடனான அவரது இரண்டாவது திருமணம் 10 மாதங்கள் நீடித்தது. அவர் தனது தற்போதைய மனைவி புஷ்ரா பீபி கானை (முன்னாள் மேனகா) 2018 இல் திருமணம் செய்து கொண்டார். 2017 இல் இம்ரான்கான் மீது #MeToo குற்றம் சுமத்தப்படாது.

அவரது சொந்தக் கட்சியைச் சேர்ந்த எம்.பி யாக இருந்த அவர் மீது குற்றம் சாட்டிய ஆயிஷா குலாலாய் வசீர், 2013 இல் தனக்கு “தகாத” குறுஞ்செய்திகளை அனுப்பியதாகக் கூறி, பாராளுமன்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்தார். குற்றச்சாட்டை இம்ரான்கான் மறுத்தார். ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# வரம்பு மீறும் பாதுகாவலர்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது நமது சமூகக் கட்டமைப்பு. குருவுக்குப் பின்னரே தெய்வத்தை வைத்துள்ளார்கள். மாணவர்களின் அதிகமான நேரம் ஆசிரியர்களுடன் செலவிடப்படுகிறது. பெற்றோருடன், உறவினர்களுடன் இருக்கும் நேரத்தைவிட அதிகமான நேரத்தை ஆசிரியருடன் இணைத்திருக்கின்றனர் மாணவர்கள். மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியருக்கு மிகப்பெரிய பங்களிப்பு உள்ளது. தன்னிடம் படித்த மாணவர் உயர் நிலைக்குச் சென்றால் எவர் எனது மாணவர் என உவகை கொள்வார்.

ஆசிரியர்களால் மாணவிகள் மேல் நடத்தப்படும் கொடூரங்கள் அதிகமாக வெளிச்சத்துக்கு வருவதில்லை. அவ்வப்போது சில செய்திகள் வெளிவருவதும் காலப் போக்கில் அவை மறக்கடிக்கப்படுவதும் வழமையானவை. சிறுவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு பெரியவர்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் இப்போது அதிகமாக வெளியாகின்றன. களுத்துறையில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் பலரது கண்களைத் திறந்துள்ள நிலையில், இது தொடர்பான பல பாரதூரமான கேள்விகளுக்கு இலங்கை பதில் தேடுகிறது. இச்சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எப்படி தண்டனை வழங்குவது என்ற கவலை இருக்கும் நிலையில், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தொடராமல் இருக்க என்ன செய்யவேண்டும்? என்பது மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

களுத்துறையைச் சேர்ந்த தனியார் கல்வி ஆசிரியர் ஒருவர் தனது வகுப்புகளுக்குச் சென்ற 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட சம்பவம். ஆசிரியருடன் இருக்கும்போது குழந்தைகள் எப்போதும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தகர்த்துள்ளது. குழந்தைகளை தனியார் கல்வி நிறுவனங்களில் கண்காணிக்காமல் விட்டுச் செல்லும் பல பெற்றோர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை மணியாக உள்ளது. மேலும் இப்போது தனியார் டியூஷன் வகுப்புகளை வைத்திருப்பதன் முக்கியத்துவம் குறித்து தேசிய அளவிலான பேச்சுக்கு வழிவகுத்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய கண்காணிப்பு அவசியம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது

வரலாற்றுப் பெருமை மிக்க கல்லூரியில் படிக்கும் மாணவர்களும் தனியார் கல்வி நிலையங்களை நாடுகிறார்கள். பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பிரபலமான ஆசிரியர்கள்தான் தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கின்றனர். சில தனியார் கல்வி நிலையங்கள் தமக்கென சீருடை கொடுக்கின்றன. மாணவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்கின்றன. பாடசாலை முடிந்ததும் ரியூஷன், இரவு வீட்டு வேலை என மாணவர்களின் வாழ்வு இயந்திரமயமாகி உள்ளது.

ஐந்தாம் வகுப்பில் மாணவர்கள் மீது ஏற்றப்படும் கல்விச்சுமை பல்கலைக்கழகம் வரை தொடர்கிறது. பொது அறிவு, விளையாட்டு என்பனவற்றின் பக்கம் மாணவரின் சிந்தனை திரும்புவதில்லை.

தனியார் கல்வி வகுப்புகள் வழங்கும் கல்வியின் தரத்தை முறைப்படுத்தவும் அந்த வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளின் தொகுப்பைத் தயாரிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் தனியார் கல்வி வகுப்புகள் தொடர்பான விதிமுறைகளின் தேவை மற்றும் கோரிக்கை இருந்த போதிலும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த் குமார் ஒரு முக்கியமான யதார்த்தத்தை சுட்டிக் காட்டினார். அதாவது, தனியார் கல்வித்துறையை ஒழுங்குபடுத்துவதில் உள்ள வரம்புகள், தனியார் கல்வித் துறையின் மீது அரசாங்கம் முழுக் கட்டுப்பாட்டை வைத்திருக்க முடியாது என்பதால் குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களைச் செய்வது சாத்தியமற்றது என்று அவர் கூறினார்.

அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்பது தொடர்பான வரம்புகள், கூறப்பட்ட சூழலில் குழந்தைகளின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் மேம்படுத்த அரசாங்கத்தால் மட்டும் முடியாது என்ற யதார்த்தத்தை சுட்டிக்காட்டுகிறது. எனவே, இந்த முயற்சிக்கு பெற்றோரின் பங்களிப்பையும் பெற வேண்டும்.

தனியார் ஆசிரியர்களின் செயல்திறன் மற்றும் நடத்தை கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும், மேலும் இது பெரும்பாலும் பெற்றோரின் பொறுப்பாகும். குறிப்பாக, மாணவர்களின் வீடுகளுக்குச் செல்லும் தனியார் ஆசிரியர்களின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை பெற்றோர்கள் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும். ஒரு சில ஆசிரியர்கள் தம்மிடம் படித்த மாணவிகளைத் திருமணம் செய்துள்ளனர்.

ஆசிரியத்தொழில் புனிதமானது. அவர்கள் தவறு செய்தால் தட்டிக் கேட்க வேண்டும். அதற்குரிய வல்லமையை பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும். ■

---

# ட்ரூடோவின் அறிக்கைக்கு இலங்கை கண்டனம்

யுத்த வெற்றியின் 14 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ “தமிழர் இனப்படுகொலை நினைவு தினம்” என அழைக்கப்படும் தினத்தை அங்கீகரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதை அடுத்து, இலங்கை மீண்டும் கனடாவுடனான இராஜதந்திரப் போரில் இறங்கியுள்ளது. உள்நாட்டில் நல்லிணக்கச் செயற்பாட்டிற்கு உதவாத அறிக்கையை இலங்கை கண்டிப்பதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தெரிவித்தார்.



கனேடிய தலைவர் தனது அறிக்கையில், “இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயரமான உயிர் இழப்புகளை இன்று நாம் சிந்திக்கிறோம். முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்தனர், மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் காயமடைந்த அல்லது இடம்பெயர்ந்த இந்த அர்த்தமற்ற வன்முறையால் ஏற்படும் வலியுடன் தொடர்ந்து வாழும் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுடன் எங்கள் எண்ணங்கள் உள்ளன.

மோதலால் பாதிக்கப்பட்ட தமிழ் கனேடியர்களின் - நான் பல ஆண்டுகளாக நாடு முழுவதும் உள்ள சமூகங்களில் சந்தித்த பலர் உட்பட மனித உரிமைகள், அமைதி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதை ஒரு நிலையான நினைவூட்டல். அதனால்தான் கடந்த ஆண்டு மே 18 தமிழ் இனப்படுகொலை நினைவு நாளாக அனுசரிக்கும் பிரேரணையை பாராளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் உரிமைகளுக்காகவும் அத்துடன் இலங்கையில் தொடர்ந்து கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவருக்காகவும் கனடா வாதிடுவதை நிறுத்தாது.

2022 ஒக்ரோபரில், நாட்டில் மனித உரிமைகள், பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண இலங்கை அரசாங்கத்தை அழைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UNHRC) தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதில் எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து கொண்டோம். இலங்கையில் மதம், நம்பிக்கை மற்றும் பன்மைத்துவ சுதந்திரம் ஆகியவற்றைக் கோரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் பிற தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதில் கனடா உலகளாவிய முன்னணியில் உள்ளது, வரும் ஆண்டுகளில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கான அத்தியாவசியக் கூறுகள் மேலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான எங்கள் பணியைத் தொடருவோம். உலகம் முழுவதும். மேலும் 2023 ஜனவரியில், தீவில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு பதிலளிக்கும் வகையில், நான்கு இலங்கை அரசு அதிகாரிகளுக்கு எதிராக எங்கள் அரசாங்கம் தடைகளை விதித்தது.

தமிழ் கனேடியர்கள் நம் நாட்டிற்கு ஆற்றி வரும் மற்றும் தொடர்ந்து செய்து வரும் பல பங்களிப்பை அங்கீகரிக்க கனேடியர்கள் அனைவரையும் கனடா அரசின் சார்பாக அழைக்கிறேன். இலங்கையில் ஆயுதப் போரின் தாக்கம் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும் பாதிக்கப்பட்ட அல்லது இழந்த அன்புக்குரியவர்களுக்கு ஒற்றுமையைத் தெரிவிக்கவும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன் என கூறினார். ■

# ஒருபுறம் கஞ்சி மறுபுறம் கலயம் இரண்டுக்கும் நடுவே பதினான்கு வருடங்கள்




அவதானி

இறுதிப்போர் முடிந்து 14 வருடங்களின் பின்னர், இலங்கை ஜனாதிபதியுடன் தமிழ்க் கட்சிகள் பேசத்தொடங்கிய காலப்பகுதியில் வடக்கிலும் கிழக்கிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சியை, அந்தப் போரில் பாதிக்கப்பட்ட உறவுகளும் தன்னார்வத் தொண்டர்களும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் கொடுந்துயரத்தை நினைவேந்தவிடாமல் தடுத்துக்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை விரட்டும் காலிமுகத்திடல் அறப்போராட்டத்தின் போதும் கடந்த ஆண்டு இதே மாதம் அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் இன்றைய ஜனாதிபதி அமைச்சராகவும் இவரது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதிப் பதவியிலுமிருந்த காலப்பகுதியில் எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகம் குறித்தும் காலிமுகத்திடலில் நினைவுகூரப்பட்டது.

அவ்வேளையில் அங்கு தோன்றிய சுவடுகளை முற்றாக அழித்துவிட்டு, இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் காலிமுகத்திடலை மாற்றினார் இன்றைய ஜனாதிபதி.

மீண்டும் அங்கே எவரும் போராட்டம் நடத்த முடியாதவகையில் சட்டங்களை இறுக்கமாக்கினார், இந்த அதிகார வர்க்கத்தின் பிரதிநிதி.

இவர் பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன அதிபராகவும் இருந்த காலப்பகுதியில் இவர்களுடன் தேன் நிலவுகொண்டாடிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், அவ்வேளையில் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு தீர்வையும் அடையாமல் இருந்துவிட்டு, தற்போது பேச்சுவார்த்தைக்கு வந்தனர்.

இவர்கள் தலைநகரில் பேச்சுவார்த்தையில் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தபோது வடக்கிலும் கிழக்கிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தது.

ஒரு குடும்பத் தலைவனுக்கோ, தலைவிக்கோ தமது குடும்பத்தின் தேவை என்ன..? என்பது நன்கு தெரிந்திருக்கும். பிள்ளைகள் அவர்களை நம்பி வாழ்பவர்கள். சுயமாக தங்கள் கால்களில் நிற்கும் வரையில் அவர்கள் தமது பெற்றோரின் தயவில்தான் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முயற்சிப்பார்கள்.

ஒரு நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் குடும்பத் தலைவன் - தலைவிக்கு ஒப்பானவர்கள்.

அரைநூற்றாண்டுக்கு மேல் அரசியல் அனுபவம் மிக்க சமகால ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இலங்கையில் பிழையான அரசியல் நடைமுறைகளினால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கும் மூவின மக்களுக்கும் என்ன தேவை? என்பது தெரியாமலா இருக்கிறது.?

இதுவரையில் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக எத்தனை பேச்சுவார்த்தைகள் நடந்துவிட்டன.

தொடர்ந்தும் ஏமாற்றியமையால்தான், சிங்களவர் தரப்பிலும் தமிழர் தரப்பிலும் தோன்றிய இளம் தலைமுறையினர் ஆயுதங்களை நம்பி களத்தில் இறங்கினர்.

1971 இல் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு இந்தியா உதவ முன்வந்தது போன்று, 2009 இறுதி யுத்தத்தின்போதும் அதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தியா முன்வந்தது.

அதனால்தான், “அந்த யுத்தத்தை நடத்தியது இந்தியாதான்” என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் சொல்லி வந்தார்.

நிறைவேற்று அதிகாரம் மிக்க பதவியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்தன, தனது உட்கட்சி வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டே அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

அதனை எதிர்த்தவரும் அந்த ஒப்பந்தத்தில் இந்தியத் தரப்பில் கைச்சாத்திட்டவரும் இறுதியில் யாரால், எவ்வாறு கொல்லப்பட்டனர்? என்பதை மீண்டும் இங்கு நினைவுபடுத்தவேண்டிய அவசியம் இல்லை.

பேச்சுவார்த்தை என்பது காலத்தைக் கடத்தும் ஒருவகை உத்தி என்பது எமது தமிழ்த்தலைவர்கள் உட்பட சாதாரண மக்களுக்கும் தெரியும்.

தமிழ்த்தலைவர் சம்பந்தன் ஐயா அவர்களுக்கு 90 வயதாகிவிட்டது. அவருடைய ஆயுட்காலத்திற்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிட வேண்டும் என்ற குரல்களும் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

தந்தை செல்வாவின் காலத்தில் தமிழ் ஈழம் அமைத்துவிடவேண்டும் என்று முன்னர் சொன்னவர்களின் அடுத்த சந்ததிதான் தற்போது இவ்வாறும் சொல்லி வருகிறது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைத்தால், ஓரளவு அதிகாரப்பரவலாக்கல் இடம்பெறலாம் என்று ஒரு தரப்பு சிந்திக்கின்றது.

இதேவேளை, தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறி அமைக்கப்பட்டுவரும் புத்த விகாரைகளுக்கு எதிராக தமிழ்மக்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும்போது, தென்னிலங்கை கடும்போக்காளர்கள் குரலில் வழக்கமான சுருதி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

பௌத்த பாரம்பரியத்தை வடக்கு - கிழக்கில் பாதுகாக்க அரசு முன்வரவேண்டும் என்று கடும்போக்காளர்களான பௌத்த பிக்குகள் மீண்டும் சொல்லத் தொடங்கிவிட்டனர்.

ஆளுநர்களை நியமிக்கும்போதும் பௌத்த பாரம்பரியத்திற்கும் சிங்கள மக்களுக்கும் பாதிப்பு வந்துவிடக்கூடாது எனச் சொல்கிறார்கள்.

இத்தகைய குரல்களுக்கு மத்தியில்தான் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இரண்டு தமிழர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் வடக்கினையும் மற்றவர் மலையகத்தையும் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

முன்பு இதே அரசினால் வடக்கில் நியமனம் பெற்றிருந்த ஆளுநருக்கும் இங்கிருந்த தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கும் இடையே இருந்த உறவின் இலட்சணம் நாம் அறிந்ததே!

ஆளுநர்கள், உயர் அதிகாரத்திலிருக்கும் நாட்டின் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். அவர், அந்த அதிகாரத்திற்கு விரோதமாக இயங்கவே முடியாது. இயங்கினால், பதவி பறிபோய்விடும்.

ஆளுநர்கள் மூலம் மாகாணங்களின் நிர்வாகத்தை கவனிக்க ஜனாதிபதி விரும்புவார். அவரை மீறி ஆளுநர்கள் எதனையும் செய்துவிட முடியாது.

இவ்வாறு ஒரு புறத்தில் ஆளுநர்களிடம் தனது விருப்பத்திற்கு ஏற்ப அதிகாரத்தை கொடுத்துவிட்டு, பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஒவ்வொரு முள்ளிவாய்க்கால் தினமும் மே மாதங்களில் வரும்போது, “போர்க் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றங்களில் நிறுத்துவேன்” என்ற குரல் எழுந்து, பின்னர் ஓய்ந்துவிடும். மீண்டும் அடுத்த வருடத்தில் மே மாதம் வரும்போது இந்தக்குரல் ஒலிக்கத்தொடங்கும். இப்படியே கடந்த 14 வருடங்கள் ஓடிவிட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஒரு புறத்தில் கஞ்சி வார்த்துக்கொண்டிருக்கும் போது, எமது தமிழினத்தலைவர்கள் கலயம் ஏந்திக் கொண்டு தீர்வுப்பிச்சைக்காக ஜனாதிபதியிடம் கையேந்திக்கொண்டிருக்கிறார்கள்.

அர்த்தமுள்ள தீர்வை வழங்கக்கூடிய நிறைவேற்று அதிகாரம் இந்த ஜனாதிபதியிடம் இருக்கிறதா...? அவரிடத்தில் ஆளுநர்களை மாற்றும் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தையாவது தக்கவைத்துக்கொள்வதற்கு அவர் தன்னை இந்தப்பதவியில் அமர்த்துவதற்கு பின்னணியிலிருந்தவர்களுக்கும் விசுவாசமாக இருக்கவேண்டிய சூழ்நிலையின் கைதியாகவே இருப்பார்.

அடுத்த ஆண்டு ( 2024 ) மே மாதம் வரும்போதும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை நாம் பார்ப்போம்.

**யார் அதிகாரத்தில் இருப்பார்கள்? யார்... யார்? ஆளுநர்களாக இருப்பார்கள்? என்பதை இப்போது சொல்ல முடியாது.** ■

# ஹரியையும் மனைவியையும் துரத்திய பப்பராசிகள்



இங்கிலாந்து இளவரசர் ஹரியும் அவரது மனைவி மேகனும் அமெரிக்காவில் பப்பராசிகள் எனப்படும் புகைப்படக்காரர்களால் காரில் துரத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து ராணியாக இருந்த இரண்டாம் எலிஸபெத் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் உடல்நலக் குறைவால் காலமானார். இதையடுத்து அவரது மகன் சார்ள்ஸ் மன்னராக அறிவிக்கப்பட்டார். அரச பணிகளை கவனித்து வந்த மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் கடந்த 6 ஆம் திகதி முறைப்படி முடிசூடிக் கொண்டார். மன்னர் சார்ள்ஸைத் தொடர்ந்து அவரது மனைவி கமீலாவும் இங்கிலாந்து ராணியாக முடிசூடிக் கொண்டார். இந்த வைபவத்தில் லகத் தலைவர்கள் பலரும் பங்கேற்றனர். மன்னர் குடும்பத்தினர் அனைவரும் பங்கேற்ற இந்தக் கொண்டாட்டத்தில் மன்னர் சார்ள்ஸின் மூத்த மகன் வில்லியம் தனது மனைவி கேத் மிடில்டன், குழந்தைகளுடன் இந்த விழாவில் கலந்து கொண்டார். ஆனால், ஹரி மட்டும் வைபவத்தில் கலந்துகொண்டார். அவருக்கு மூன்றாவது வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டது.

இளவரசர் ஹரிஅரண்மனையிலிருந்து வெளியேறிவிட்டார். இதனால் அவருக்கும் அரசு பரம்பரைக்கும் இருக்கும் பந்தம் அறுந்துவிட்டது. இந்த நிலையில் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் ஹரி மட்டும் பங்கேற்றார். ஆனால், அவருடைய மனைவி மேகன் உட்பட குழந்தைகள் யாரும் பங்கேற்க அனுமதி இல்லை என கூறப்பட்டது. நியூயோர்க் நகரில் நடந்த ஒரு விருது வழங்கும் நிகழ்ச்சியில் இளவரசர் ஹரிக்கும் மனைவியும் நடிகையுமான மேகன் மார்க்கெல்லுக்கு விருது வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஹரி, மேகன், மேகனின் தாயார் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சி முடிந்ததும் 3 பேரும் ஒரே காரில் தங்களின் வீட்டிற்கு புறப்பட்டுள்ளனர். அப்போது இளவரசர் ஹரியையும் அவரது மனைவி மேகனையும் போட்டோ எடுக்க திரண்ட புகைப்படக்காரர்கள் அவர்களை 10ற்கும் மேற்பட்ட கார்களில் விரட்டியுள்ளனர். சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக புகைப்படக்காரர்கள் இளவரசர் ஹரி சென்ற காரை துரத்தியுள்ளனர். இந்தக் கார் சேஸில் பல விபத்துகள் நடந்துள்ளன. இதில் ஏராளமான கார்கள் சேதமடைந்துள்ளன. அதிஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என நியூயோர்க் நகர பொலிஸார் தெரிவித்தனர்.

1997 ஆம் ஆண்டு பிரான்ஸில் இளவரசி டயானாவின் உயிரைப் பறித்த சம்பவத்தை நினைவுபடுத்தியுள்ளது. ஹரியின் தாயாரான டயானா தனது பாதுகாவலர்களுடன் காரில் சென்ற போது அவரை புகைப்படம் எடுக்க பப்பராசிகள் துரத்தியதால் பாரிஸில் அவரது கார் விபத்துக்குள்ளானது. வேல்ஸ் இளவரசி டயானா அகால மரணமடைந்தார். டோடி ஃபயீத் என்ற எகிப்துத் திரைப்பட தயாரிப்பாளரும் இந்த விபத்தில் மரணமடைந்தார். டயானாவுக்கு வேறு ஒருவருடன் தொடர்பிருந்ததாகவும் அவருடன் டயானா வெளியே செல்கிறார் என்றதும் அவரை படம் பிடிக்க புகைப்படக்காரர்கள் முடிவு செய்தனர். இதற்காக எப்படியாவது துரத்தி அந்த நபரைப் புகைப்படம் எடுக்க முயன்றனர். ஆனால், இந்த முயற்சியில் இரு உயிர்கள் பலியாகின. இது குறித்து பல்வேறு தகவல்கள் உலா வருகின்றன. டயானாவின் கார் விபத்தில் சிக்கிய போது அவர் உயிருடன் இருந்ததாகவும் அவரை காரில் இருந்து வெளியே தூக்கிய நபர்கள் தெரிவித்தனர். மேலும் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவருக்கு சி.பி.ஆர் சிகிச்சை கொடுத்ததாகவும் அப்போது 20 விநாடிகளில் அவருக்கு நினைவு திரும்பியதாகவும் அவரை அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளனர். டயானாவுக்கு நடைபெற்றதுபோல ஒரு திகில் சம்பவம் ஹரியின் வாழ்க்கையிலும் நடந்துள்ளது.

புகைப்படப்பிடிப்பாளர்களால் (பப்பராசிகளால்) துரத்தப்பட்ட இளவரசர் ஹரி தம்பதியினர் பாரிய விபத்தொன்றில் சிக்கும் ஆபத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். நியூயோர்க்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஹரி மேகன் தம்பதியினர் விருது வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அவர்களை புகைப்படப் பிடிப்பாளர்கள் பின்தொடர்ந்து துரத்தியுள்ளனர். தங்கள் வாகனம் இரண்டு மணி நேரம் துரத்தப்பட்டது என இளவரசர் ஹரி தெரிவித்துள்ளார். இதன்காரணமாக வீதியில் காணப்பட்ட வாகனங்கள் பாதசாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் தங்கள் வாகனம் மோதுப்படும் நிலை உருவானது என இளவரசர் ஹரி தெரிவித்துள்ளார். விருது வழங்கும் நிகழ்வில் ஹரி தம்பதியினருடன் மேகனின் தாயாரும் கலந்து கொண்டுள்ளார். அவர்கள் அந்த நிகழ்விலிருந்து வெளியேறுவதை புகைப்படங்கள் காண்பித்துள்ளன. இதன்பின்னர் ஆறிற்கும் மேற்பட்ட கார்கள் அவர்களின் வாகனத்தை துரத்தியுள்ளன. கண்மூடித்தனமாக ஹரியின் வாகனத்தை அவர்கள் பின்தொடர்ந்துள்ளனர். ஆங்கிலப் படப்பாணியில் ஹரியின் வாகனம் துரத்தப்பட்டுள்ளது. பப்பராசிகள் வாகனத்தை துரத்தியவாறு ஹரி தம்பதியினரை படம்பிடித்துள்ளனர்.

கார் துரத்தலின் போது நியூயோர்க் நகரத்தின் வழியாக ஹரியும் மேகனும் பயணம் செய்து சென்ற டாக்ஸி சாரதி சுக்சர்ன் சிங், அவர்களைப் பப்பராசிகள் பின்தொடர்ந்ததாகக் கூறினார். ஆனால், அது "பேரழிவை நெருங்கிவிட்டது" என்ற தம்பதியரின் மதிப்பீட்டை ஏற்கவில்லை. இதற்கிடையில், சம்பவத்தில் தொடர்புடைய ஒரு பப்பராசி ஓட்டுநர், தம்பதியினருடன் தொடர முயற்சிப்பது "மிகவும் பதற்றமாக" இருந்ததாக ஒப்புக்கொண்டார்.

நியூயோர்க்கில் நடந்த "துரத்தலின்" போது பப்பராசி எடுத்த புகைப்படங்களையும் வீடியோக்களையும் ஏஜென்சியிடம் ஒப்படைக்குமாறு ஹரியும் மேகனும் கோரியுள்ளனர்.

ஆனால், அது மறுக்கப்பட்டது. சசெக்ஸின் டியூக் மற்றும் டச்சஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர்கள் பேக்கிரிட் ஏஜென்சிக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர். ஆனால், பேக்கிரிட்டின் வழக்கறிஞர் பதிலுக்கு ஒரு வலுவான கடிதத்தை அனுப்பினார்

அக்கடிதத்தில்: "அமெரிக்காவில், சொத்து அதன் உரிமையாளருக்குச் சொந்தமானது என்பது உங்களுக்குத் தெரியும், மூன்றாம் தரப்பினர் அதைத் தங்களுக்கு வழங்குமாறு கோர முடியாது, ஒருவேளை மன்னர்கள் கோரலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரச வாழ்க்கையை விட்டு வெளியேறினாலும் இளவரசர் ஹரியைத் துரத்துவதை பப்பராசிகள் கைவிடவில்லை. ■

சிலம்பு





# காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தம்

# ரணில் வகுக்கும் வியூகம்

## ஜே.ஆர் வகுத்த சூழ்ச்சி வகிபாகத்தின் நீட்சியாகக் கையாளப்படும் அரசியல் உத்தி

அ.நிக்ஸன்

வடக்குக் கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் உள்ள காணிகளை கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி அரசின் சில திணைக்களங்கள் அபகரித்து வரும் சூழலில், காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை உத்தரவிட்டிருக்கிறார். அதுவும் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முதல் நாள் இந்த உத்தரவை ரணில் பிறப்பித்திருக்கிறார். தமிழர் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கல் நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவங்களில் அரசியல் யாப்புச் சட்டங்களுக்கு மாறாகவும் சட்டங்களுக்கு அமைவானது என்று காண்பிக்கப் போலியாகத் தயாரிக்கப்பட்ட காணி உறுதிகளுடனும் பௌத்த மயமாக்கல் வேகமடைந்துள்ளது.

1988 இல் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி - பொலிஸ் அதிகாரங்கள் குறிப்பாக, காணி அதிகாரங்கள் அமுல்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் காணி திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து ரணில் பரிந்துரைத்திருக்கிறார்.

2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போதும் காணி திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து அப்போது பிரதமராக இருந்த ரணில் துரித நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

1983 இல் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பாக 1948 இல் இருந்து அரச அதிகாரிகளின் ஏற்பாட்டில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.



இடையில் நடைபெற்ற முப்பது வருட போரினால் குடியேற்றங்கள் தடைப்பட்டிருந்தன. அல்லது தாமதமடைந்திருந்தன என்று கூறலாம். போரை இல்லாதொழித்த மஹிந்த ராஜபக்ஷ, 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இராணுவத்தைப் பயன்படுத்தியே காணிகளை அபகரித்தார்.

ஆனால், கொழும்பை மையமாகக் கொண்ட தொல்பொருள் திணைக்களம், வன இலாகத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அரச நிறுவனங்கள் மூலம் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் உத்தியை ரணில் 2015 இல் பிரதமராக இருந்தபோது அறிமுகப்படுத்தியிருந்தார்.

இலங்கை ஒற்றையாட்சி சட்டத்தின் கீழ் காணிகளை அபகரிக்கும் இத்திணைக்களங்களுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இராணுவமும் ஆதரவு வழங்கியிருந்தது.

2020 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டபாய ராஜபக்ஷவும் ரணில் கையாண்ட அதே உத்தியைத்தான் தொடர்ந்தார். எனினும் 2022 ஜூலை மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில், காணி அபகரிப்புகளை முழுமையாக சட்டரீதியாக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்.

நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள ரணில், பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றை நியமிக்குமாறும் அறிவுரை வழங்கியுள்ளார்.

காணி முகாமைத்துவம் குறித்து நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துகளை திருத்துவது உள்ளீடு செய்வது குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் சென்ற புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது ரணில் வலியுறுத்தியிருக்கிறார்.

காணிப் பயன்பாடுகள் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டு வரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாகக் காணப்படுவதாகவும் ரணில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணிகளை பெறுவதில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கிப் புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவே ரணில் அதிகமாக பிரஸ்தாபித்திருக்கிறார்.

காணி ஆணைக்குழுவின் ஊடாக மாகாண சபைகளின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திக்குமாறும், கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள காணி உரிமையாளர்களின் விபரங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள், பயன்படுத்தப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பாகக் கண்டறிந்து பிரதேச செயலாளர் மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ரணில் அதிகாரிகளுக்கு உத்தரவுமிட்டுள்ளார்.

ஆனால், இலங்கைத்தேசிய காணி ஆணைக்குழு கடந்த முப்பத்தைந்து வருடங்களாக உருவாக்கப்படவில்லை என்பதுதான் இங்கே வேடிக்கை. இந்த நிலையிலேயே புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு ரணில் உத்தரவிட்டிருக்கிறார்.

காணிச் சட்ட திருத்தம் பற்றி தேசிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டுமானால், வடக்குக் கிழக்கு மாகாண பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை எதுவும் இல்லாமல் ரணிலின் உத்தரவு அமைந்துள்ளது. அல்லது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறான திட்டங்கள் எதுவுமேயில்லாமல் வெறுமனே தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு முற்றிலும் சிங்கள அதிகாரிகளைக் கொண்ட குழுவிடம் உத்தரவிட்டுள்ள நிலையில், வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சு நடத்தியிருக்கிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஏற்பாடுகள் பற்றியே பேச்சு இடம் பெற்றதாகத் தமிழரசுக் கட்சி கூறினாலும் காணி திருத்தச் சட்ட ஏற்பாடுகள் இந்த பேச்சுத் தொடர்பான சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்களை மையப்படுத்தி இலங்கைத் தேசிய காணி ஆணைக் குழு ஒன்றை பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கலாம்.

ஆனால், இதுவரையும் மாகாணங்களை உள்ளடக்கிய இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக் குழுக்கள் உருவாக்கப்படாமல் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அதிகாரிகள் அங்கம் வகிக்கும் அரச திணைக்களங்களிடம் பொறுப்புகள் பகிரப்பட்டுள்ளன.

காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் சட்டத்தைப் புதுப்பித்து அதன் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடம் (கோப் குழு) 2018 இல் ரணில் பிரதமராக இருந்தபோது உத்தரவிட்டிருந்தார். இந்த முயற்சியை 2020 இல் ஜனாதிபதியாக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ தொடர்ந்தார்.

2020ஆம் ஆண்டுக்கான காணி சீர்திருத்த ஆணைக்குழு குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் சமகால செயலாற்றுகை குறித்து ஆராய கோப் குழு தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அப்போது கூட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது.

பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவை அடுத்தடுத்துக் கூட்ட வேண்டிய அவசியம் குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஆணைக்குழு காணிகளைக் கையகப்படுத்தும்போது காணப்படும் பிரச்சினைகள் கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்கமைய கடந்த இருபது வருடங்களில் காணி கையகப்படுத்தல் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய அறிக்கையும் 2018 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு



காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஏற்ப இலங்கைக்கு ஆதரவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் (EU) விருப்பம் தெரிவித்துள்ளது. நாட்டிற்கு மிகவும் நெகிழ்ச்சியான மற்றும் நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உதவுவதற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய பசுமை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து தீவு நாட்டிற்கு விளக்கமளிக்கும் போது, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு மன்றங்களில், காலநிலை நிதியளிப்பு விருப்பங்கள், காலநிலை மாற்ற நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தை பகிர்ந்து கொண்டது.

ஏறக்குறைய ஏப்ரல் மாத இறுதியில் நடைபெற்ற இலங்கை - ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வின் போது ஐரோப்பிய ஒன்றியம் தனது விருப்பத்தை முன்வைத்தது. ஐரோப்பிய பசுமை ஒப்பந்தம் கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து ஒரு உயிர்நாடியாகக் கருதப்படுகிறது. NextGeneration EU Recovery Plan மற்றும் 0000 இன் ஏழு ஆண்டு பட்ஜெட்டில் இருந்து 1.8 டிரில்லியன் யூரோ முதலீடுகளில் மூன்றில் ஒரு பங்கு ஐரோப்பிய பசுமை ஒப்பந்தத்திற்கு நிதியளிக்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் இலட்சிய காலநிலை செழிப்புத்திட்டத்தை (CPP) வரவேற்றது, இது நாட்டை பசுமையான பொருளாதாரத்திற்கு மாற்றுவதில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. CPP ஆனது காலநிலை தழுவல் மற்றும் 2050 க்குள் நிகர எதிர்மறை கார்பன் உமிழ்வுகளை அடைவதற்கான சாலை வரைபடத்தை உள்ளடக்கியது.

மேலும், UNFCCC இன் கட்சிகளின் மாநாட்டின் (COP27) தொடர்ச்சியில், இழப்பு மற்றும் சேதநிதியை செயல்பட வைப்பது குறித்து இரு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் SDG களை அடைவதில் இலங்கை அதன் அர்ப்பணிப்பு மற்றும் நிலையான முன்னேற்றம் மற்றும் தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் SDG களை செயல்படுத்துவதற்கான முன்னேற்ற மதிப்பீட்டை வலுப்படுத்த எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளை முன்னிலைப்படுத்தியது.

இலங்கையானது காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியதாக உள்ளது, ஏனெனில் அது ஏற்கெனவே கடல் மட்டம் அதிகரித்து வருவதையும் அதிக தீவிர காலநிலை நிகழ்வுகளையும் அனுபவிக்கும் ஒரு பிராந்தியத்தில் அமைந்துள்ளது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாடு ஏற்கெனவே கண்டுள்ளது, அடிக்கடி வெள்ளம் மற்றும் வறட்சி, அத்துடன் அதன் உட்கட்டமைப்பு மற்றும் விவசாயத்திற்கு சேதம் ஏற்படுகிறது.

# தினேஷ் ஷாஃப்டரின் உடல் தோண்டி எடுக்கப்படுமா?

தொழிலதிபர் தினேஷ் ஷாஃப்டரின் மரணம் தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட வைத்தியர்கள் ஐவர் அடங்கிய நிபுணர் குழு, உயிரிழந்த திரு. ஷாஃப்டரின் சடலத்தைத் தோண்டி எடுக்க வேண்டும் என எழுத்து மூலம் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் கோரியுள்ளது.

பெப்ரவரி 17 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய, ஷாஃப்டரின் மரணம் தற்கொலையா? அல்லது கொலையா? என்பதைத் தீர்மானிக்க ஐவர் அடங்கிய விசேட வைத்தியக் குழுவை நியமிப்பதற்கு விசேட வைத்தியர்களின் பட்டியலை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பித்தார். .



மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய, இறந்தவரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட வேண்டும், அதற்காக ஐந்து பேர் கொண்ட விசேட வைத்திய சபை, கொழும்பு மேலதிக நீதவான் திருமதி ராஜீந்திர ஜயசூரியவிடம் அனுமதி கோரியது.

இதன்படி, இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிடுமாறு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் திகதியை நிர்ணயித்துள்ளது.

அதன்படி, கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் அசேல மெண்டிஸ் தலைமையிலான ஐவரடங்கிய நிபுணர் குழு பெப்ரவரி 27 ஆம் திகதி நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டது.

பேராசிரியர் டி.சி.ஆர் பெரேரா, பேராசிரியர் டி.என்.பி பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ருவன்புர ஆகியோர் ஏனைய அங்கத்தவர்கள்.









கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் கடந்த வியாழக்கிழமை (18) காலை திருகோணமலையிலுள்ள சைவ, இஸ்லாம்,பௌத்த, கிறிஸ்தவ மத ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து சமய வழிபாடுசெய்தார்.

# இந்தியப் பயணிகளுக்கான இலவச விஸாத் திட்டத்தை நீடிக்க ஆலோசனை



அதிக எண்ணிக்கையிலான இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முயற்சியில், ஒக்ரோபர் வரை இலவச விஸாத் திட்டத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, முன்மொழிந்துள்ளார்.

"அண்டை நாடுகளிலிருந்து அதிக பயணிகளை ஈர்க்கும் வகையில் ஒக்ரோபர் வரை இந்தியப் பயணிகளுக்கான $20 விஸாக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்," என்று அவர் கூறினார். குறைந்த வருகையின் போது பார்வையாளர்களைக் கவர பல நாடுகள் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்கின்றன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடனான சந்திப்பு நடைபெறவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இலவச விஸாத் திட்டத்திற்கான யோசனையைக் கையளிக்கவுள்ளார்.

இலங்கைக்கு வரும் இந்தியப் பயணிகள் விஸாக் கட்டணங்களுக்காக 20 டொலர்களுக்கு மேல் செலவிடுவதாகவும் இதன் மூலம் கிடைக்கும் வருமானம் சுற்றுலாத் துறையிலும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைச்சர் கருத்து தெரிவித்தார்.

"$ 20 விஸாக் கட்டணத்துடன் ஒப்பிடும்போது நாட்டிற்குள் அவர்கள் செலவழித்ததன் தாக்கம் மிகப்பெரியது. இலவச விஸாத் திட்டத்தை நீட்டிப்பது சுற்றுலாத் துறைக்கும் பொருளாதாரத்திற்கும் மட்டுமே பயனளிக்கும்," என்று அவர் வலியுறுத்தினார்.

மே முதல் ஜூலை வரை பொதுவாக குறைந்த வரத்து காலம் என்றும் இந்தியா போன்ற குறுகிய தூர சந்தைகளில் இருந்து பயணிகளை ஈர்க்கும் வகையில் இந்தத் துறை அமைந்தால், தொழிலை பிஸியாக வைத்திருக்க இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்றார்.

ஏப்ரலில் இலங்கைக்கான சிறந்த சுற்றுலா மூலச் சந்தையாக இந்தியா வலுவாக வெளிப்பட்டது, ரஷ்யாவை இரண்டாவது இடத்திற்கு தள்ளியது, அதே நேரத்தில் மே மாதத்திலும் அது சிறந்த சந்தையாக உள்ளது. ஜனவரி முதல் மே 14 வரை 75,670 இந்தியப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

2023 இன் முதல் நான்கு மாதங்களில் சுற்றுலா வருவாய் $ 696.3 மில்லியனாக இருந்தது, இது கடந்த ஆண்டின் இதே காலத்தைவிட 17.8% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது, அதே நேரத்தில் ஏப்ரல் வருவாய் $ 166.5 மில்லியனாக இருந்தது.

# கிளிநொச்சியின் எதிர்காலம்

**04**

கருணாகரன்

ஒரு காலம் (2009 க்கு முன்பு) கல்வி, மருத்துவம், சமூகச் செயற்பாடுகள், கலை, இலக்கிய, பண் பாட்டு முயற்சிகள், விவசாயம் மற்றும் கடற்றொழில், பனை வளத்தொழில் கூட்டுறவு எனப் பலதுறைகளிலும் ஆர்வத்தோடு அன்னியோன்னியமாக இணைந்து செயற்பட்ட ஆளுமைகள் இன்று சிதறுண்டு தனித்தனியாகப் பிளவுண்டுள்ளன.

கிளிநொச்சியின் எதிர்காலத்தை உருவாக்கக் கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்களில் பலரும் 2009 க்குப் பின்னர் உருவாகிய அரசியல் சூழலுக்குள் சிக்குண்டு சக்கையாகி விட்டனர். ஒரு தொகுதியினர் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று ஒதுங்கி விட்டனர். ஆனாலும் அவர்களுடைய மனதில் கிளிநொச்சியைக் குறித்த கவலைகள் உண்டு.

இந்தப் பிளவினால் பயன் பெற்றவர்கள் அரசியல்வாதிகளே. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிவஞானம் சிறிதரன் தான் இதன் பயனைக் கூடுதலாக அறுவடை செய்து கொண்டிருப்பவர். கிளிநொச்சியில் இன்னொரு பலமான தரப்பாக இருக்கும் முருகேசு சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி, போட்டி அரசியலில் இருந்தாலும் பாரபட்சம், ஒதுக்கல் போன்றவற்றில் ஈடுபடுவதாக இல்லை. அவர்களுக்கான அதிகாரமும் தற்போதில்லை என்பது இன்னொரு காரணம். மூன்றாவது தரப்பு டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி. இதனுடைய பொறுப்பில் முன்னாள் வடமாகாண சபையின் உறுப்பினர் தவநாதன் செயற்படுகிறார். அரசாங்க ஆதரவுத் தரப்பாகச் செயற்படும் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார். இதன் மூலம் அதிகாரத்தை இந்தத் தரப்பே வைத்துள்ளது. இதனால் போட்டி அரசியலும் அணி அரசியலும் வலுவாக உள்ளது. இருந்தாலும் பழிவாங்கும் நிலை குறைவு. யாரையும் புறமொதுக்கும் வேலையும் இந்தத் தரப்பு செய்வதில்லை. அதற்கு அது அவசியமும் இல்லை. அல்லது அப்படிச் செய்ய அதனால் முடியாது.







2010 இல் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டபோது சற்று அடக்கமாகவே தன்னுடைய அரசியலை முன்னெடுத்தார் சிறிதரன். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அரசியலுக்கு சிறிதரன் புதியவராக இருந்தார். அவரை அரசியல் அரங்கிற்கு கொண்டு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐயும் சுரேஸ் பிரேமச்சந்திரனையும் மீறிச் செயற்பட முடியாதிருந்தமை. இதனால் அடக்கி வாசிக்க வேண்டிய நிலையில் இருந்தார்.

அடுத்தது, அவரை வெற்றியடைய வைத்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளையோர் அணியினரின் செல்வாக்கை - அழுத்தத்தை - அவரால் மீறிச் செயற்பட முடியவில்லை. சத்தியானந்தன், திருநகர் ஜெகா, பொன்காந்தன், தயாபரன், நகுலேஸ்வரன் போன்றவர்களும் கிளிநொச்சியைச் சேர்ந்த கல்வித்துறையினர், மருத்துவத்துறையினர்களும் சிறிதரனை ஓரளவுக்கு ஆற்றுப்படுத்தினர். அதாவது, தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இதேவேளை அந்தக் காலப் பகுதியில் மக்களின் தேவைகளை மையப்படுத்தி அரசியல் பணிகளையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியையும் அதன் பிரதிநிதியாகச் செயற்பட்ட முருகேசு சந்திரகுமாரையும் சிறிதரனால் மேவிச் செல்ல முடியவில்லை.

ஆனால், 2015 க்குப் பின்னர் இந்த நிலை முற்றாகவே மாறியது. 2015 இல் சிறிதரன் இரண்டாவது தடவையாக வெற்றியடைந்தார். சந்திரகுமார் தோற்றார். அதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. சிறிதரன் ஈ.பி.ஆர்.எல்.எவ்விலிருந்து தமிழரசுக் கட்சிக்குத் தாவினார்.

இரண்டாவது தடவை வெற்றியடைந்திருந்தமையும் ஏற்கெனவே அரசியலில் பெற்றுக் கொண்ட அறிமுகமும் இணைந்து அவரை எழுச்சியடைய வைத்தன. இது அவரைச் சுற்றியிருந்த அணியினரின் சொல்லைக் கேட்க வேண்டியிருந்த நிலையை மாற்றியது. இப்பொழுது சிறிதரனுக்கு மற்றவர்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டிய நிலை உருவானது. இதற்கு உடன்படாதவர்கள் விலகிச்சென்றனர். உடன்பட்டவர்கள் அடங்கிப் போயினர்.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில் (2015 இல்) மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க - இரா சம்மந்தன் ஆட்சி நிலவியது. இது சிறிதரனுக்கு மேலும் அதிக வாய்ப்பைக் கொடுத்தது. கூடவே அவரால் நிறுத்தப்பட்டிருந்தவர்களே மாகாணசபையிலும் வெற்றியடைந்திருந்தனர். அதில் தம்பிராஜா குருகுலராஜா என்பவருக்கு கல்வி அமைச்சுப் பதவியும் கிடைத்திருந்தது. கூடவே கரைச்சி, பூநகரி பிரதேச சபைகளையும் சிறிதரனின் அணி கைப்பற்றியிருந்தது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற எந்தத் தரப்பும் கிளிநொச்சியில் வாலாட்ட முடியவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏகபிரதிநிதியாக சிறிதரனே செயற்பட்டார். இதில் ஓரளவுக்கு உடைப்புச் செய்தவர் என்றால், அது சுமந்திரனே!

ஆக, இதெல்லாம் சிறிதரனைக் கேள்விக்கிடமில்லாத அதிகாரமுடையவராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் மாற்றியது.

இதனால் சிறிதரன் தன்போக்கில் செயற்படத் தொடங்கினார். அதனை எதிர்ப்போரை மிகமோசமான வசைகளாலும் அரசியல் அதிகாரத்தினாலும் ஊடகப் பலத்தினாலும் ஒடுக்கினார். இதற்கென ஒரு அணியை உருவாக்கினார். ஏறக்குறைய வன்முறைக்கு நிகரான ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டது. சிறிதரனை எதிர்ப்போர் கடுமையாக தூற்றப்படுவார்கள். அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுவார்கள் என்ற நிலை உருவானது. அப்படி பழிவாங்கப்பட்ட பல உத்தியோகத்தர்களும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் உண்டு. ஏன் ஒரு கட்டத்தில் அரச அதிபரைக்கூட பொதுமக்கள் மத்தியில் வைத்து அவமதிப்பாகப் பேசியிருக்கிறார். ஊடகவியலாளர்களை அவர்களுடைய சாதிப்பெயரைச் சொல்லி அவமதித்தார். இதற்குத் தோதாக லங்கா ஸ்ரீ - தமிழ்வின், ஜே.வி.பி இணையத்தளம் போன்றவற்றை சிறிதரனின் சகோதரர் நடத்தி ஒத்துழைத்தார்.

சிவஞானம் சிறிதரனின் இத்தகைய அரசியல் அணுகு முறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவர்களால் எதையும் செய்யமுடியவில்லை. அரச நிர்வாகத்திலும் மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளிலும் மக்கள் மத்தியிலும் சிறிதரன் ஆதரவு அணி - எதிர் அணி என இரண்டு பிளவுகள் வெளிப்படையாகவே உருவாகின. இன்றும் அதுதான் நிலை. ஆளை ஆள் முகம் பார்க்க முடியாத, எவருடனும் எவரும் பேச முடியாத ஒரு சூழலை உருவாக்கி,

**19 ஆம் பக்கம் பார்க்க...**




# பருத்தித்துறையில் கஞ்சி வழங்கல்

முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கல் மே 18 அன்று பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார் ஆலயப் பகு





தியில் இடம்பெற்றுள்ளதுடன் இனப் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை தொகுதி அமைப்பாளர் மருத்துவர் சிவகுமார் தலைமையில் அதன் உறுப்பினர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கினர்.

# கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் அம்பன் பிங்பொங் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடியில் 55 ஆவது காலால் படையணியின் பகுதிக்கு உட்பட்ட கடற்கரையோரத்தைச் சேர்ந்த 22 விளையாட்டுக் கழகங்களுக்கு கடற்கரையோர கரப்பந்து பயிற்சி 12.01.2023 அன்று ஆரம்பிக்கப் பட்டு கடந்த 12.05.2023 அன்றிலி







ருந்து தெரிவுப்போட்டிகள் நடாத்தப் பட்டு 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 55 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன தலைமையில் இறுதிப் போட்டி நடைபெற்றது.

இராணுவ அணியின் கரையோர கரப்பந்தாட்ட அணியின் ஆசியப் பதக்கங்களை வென்ற மகளிர் அணி, ஆடவர் அணிகளின் காட்சிப் போட்டிகள் இடம் பெற்றது. தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகமும் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் மோதின.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள்

தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி - திருநெறிக் கழகத்தின





ருக்கு கிராமப்புற அறநெறிப் பாடசாலைகளை வலுவூட்டுவதற்காக ரூபா 100,000 பணமும் கல்லுண்டாய், நவாலி கிழக்கைச் சேர்ந்த மாணவிக்கு ரூபா 45,000 பெறுமதியான துவிச்சக்கர வண்டியும் வவுனியா - ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு மருத்துவ உதவிக்காக ரூபா 10,000 பணமும் திருகோணமலை - செல்வநாயகபுரம், உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி அறநெறிப் பாடசாலை கட்டடப் பணிக்காக 5 ஆம் கட்டமாக ரூபா 100,000 பணமாக வழங்கப்பட்டது.

கொம்மந்தறை - யா/கம்பர்மலை வித்தியாலயத்திற்கு ரூபா 295,000 பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்ட உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரம தொண்டர்கள், நிர்வாகிகள் வழங்கிவைத்தனர்.

# குடத்தனை கிழக்கு சுடலைக்குள் மணல் அகழ்வு



குடத்தனை கிழக்கு சுடலைக்குள் மணல்அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெறுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு இளைஞர்கள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மணல் மண் ஏற்றிய டிப்பர் ரக வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் சாரதியையும் கைதுசெய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் டிப்பர் வாகனமும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மூத்த செய்தியாளர் மாணிக்கவாசகம் எழுதிய நூல் வெளியீடு வவுனியாவில்

மூத்த செய்தியாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய "நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்" என்ற நூல் வெளியீடு எதிர்வரும் இருபத்து ஏழாம் திகதி சனிக்கிழமை வவுனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா வடக்கு வலய ஆசிரிய மத்திய நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை உப பீடாதிபதி ந.பார்த்தீபன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். "ஊடக நோக்கு" என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், அரசியல் நோக்கு என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசியர் கே.ரீ. கணேசலிங்கம், சமூகநோக்கில் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை வருகை விரிவுரையாளர், பத்திரிகையாளர் அ.நிக்ஸன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.



வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், கவிஞர் லதா கந்தையா, வீரகேசரி நாளிதழ் உதவிச் செய்தி ஆசிரியர் ஆர்.ராம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

எழுத்தாளர் மேழிக்குமரன் வரவேற்புரை நிகழ்த்த ஓய்வு நிலைக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அமரர் மாணிக்கவாசகத்தின் மனைவியுமான திருமதி நாகேஸ்வரி மாணிக்கவாசம் ஏற்புரையையும் நன்றி உரையையும் வழங்குவார்.

நிகழ்வுக்கு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

மூத்த செய்தியாளர் மாணிக்கவாசகம் கடந்த ஏப்ரல் மாதம் பன்னிரெண்டாம் திகதி இயற்கை எய்தினார். ■

# காணிக் கட்டளைச் சட்டங்களில்.....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அது மாத்திரமல்ல காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக விசேட செயலணியொன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கோப் குழு அப்போது பரிந்துரை வழங்கியிருந்தது.

குறிப்பாக, வடக்குக் கிழக்கில் பௌத்த குருமார் விகாரைகளை அமைக்கும்போது ஏற்படுகின்ற தடைகள் குறித்தும், பௌத்த குருமார் அடையாளப்படுத்தியுள்ள காணிகள் பற்றியும் உரையாடப்பட்டிருந்தன.

ஆகவே, 2018 இல் கோப் குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு ஏற்ப கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டாலும் வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் பற்றிய விபரங்களே அதிகமாகப் பெறப்பட்டு தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இப் பின்னணியிலேயே காணிச் சட்டங்களைத் திருத்துவது தொடர்பாக ரணில் அதிகாரிகளுடன் உரையாடியிருக்கிறார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

பத்துலட்சம் காணித் துண்டுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டம் தொடர்பாகவும் காணி பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசிய கொள்கைக்குள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உள்ளடக்கி தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள கோப் குழு அப்போது பரிந்துரைத்தது.

குறிப்பாக, 1972 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தை தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்க வேண்டும் என 2018 கோப் குழு வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரமே ரணில் சென்ற புதன்கிழமை காணி சட்டத் திருத்தங்கள் குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

அதுவும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் புத்தர் சிலை வைத்தல், பௌத்த விகாரைகள் கட்டுதல் போன்ற செயற்பாடுகள் தீவிரமடைந்து வரும் நிலையில், காணிச் சட்டங்கள் பற்றிய திருத்தங்கள் தொடர்பாக ரணில் ஆராய்ந்திருக்கிறார்.

பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்குரிய எந்த ஒரு ஏற்பாடுகளும் இன்றி காணிச் சட்டங்கள் பற்றிய கூட்டத்தை ரணில் நடத்தியமை குறித்து தமிழ்த்தரப்பு எந்தவிதமான கருத்துகளையும் வெளியிடவில்லை.

வடக்குக் கிழக்கில் உள்ள காணிகள் பற்றியும் அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பை மையமாகக் கொண்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடம் கையளிப்பது பற்றியும் இக் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறான சூழலிலேதான், இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். ஆனால், காணிகள் பற்றியோ குறிப்பாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழுவை நியமிப்பது குறித்தோ பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பது பட்டவர்த்தனமாக வெளிப்பட்ட தகவல். ஆனாலும் ஒற்றையாட்சி சட்டத்தில் உள்ள மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்கள்கூட கொழும்பில் உள்ள சிங்கள அதிகாரிகளை மையப்படுத்திய தொல்பொருள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வன இலாகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, தமிழர் நிலங்களில் காணி அபகரிப்புகள் சட்டரீதியாக அதாவது தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பௌத்த மரபுரிமை சார்ந்தது என்ற அங்கீகாரத்தை ரணில் விக்கிரமசிங்க கன கச்சிதமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்தியமைதான் இங்கே வேடிக்கை.

தமிழர் பிரதேசங்களில் நிலங்களை அபகரித்து பௌத்த தேசிய மரபுரிமைகளைச் செயற்கையாக உருவாக்கி சிங்களப் பிரதிநிதித்துவத்தையும் சமப்படுத்தினால் வடக்குக் கிழக்கில் பதின்மூன்றை நடைமுறைப்படுத்த சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பிரச்சினை இருக்காது. அது இந்தியாவுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

குறிப்பாக, பதின்மூன்று என்ற தனது முதுகெலும்பு தொடர்பாக இந்தியா கடும் அழுத்தங்களைக் கொடுத்தாலும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதனைச் செயற்படுத்த, பிரச்சினை இருக்காது.

ஏனைய மாகாண சபைகள் போன்று தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் கலந்த மாகாண சபையாக வடக்குக் கிழக்கு மாகாண சபைகளும் இயங்கும். "தமிழ்த் தேசியம்" - "தமிழர் தாயகம்" என்ற கோட்பாடு இல்லாமல் போகும். எனவே ஜே.ஆர் அன்று நினைத்த காரியத்தை, ரணில் இன்று ஒழுங்கு முறையாகச் செய்து முடிக்கிறார்.

2009 இல் மஹிந்த போரை இல்லாதொழித்தார். 2023 இல் ரணில் அரசியல் ரீதியாகத் தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்கிறார்.

அதாவது "தமிழ்த்தேசியம்" - "தமிழர் தாயகம்" என்பதன் முதுகெலும்பான காணி - நிலத்தை துண்டாக்கி இலங்கை ஒற்றையாட்சி முறைமைக்குள் ஒருங்கிணைக்க ரணில் சிங்கள அதிகாரிகளுடன் புதன்கிழமை பேச்சு நடத்தியிருக்கிறார் என்பதே உண்மை.

மறுபுறத்தில் "தமிழ்த்தேசியம்" - "தமிழர் தாயகம்" என்பதை ஒற்றையாட்சிக்குள் விரைவாகக் கரைக்க வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ரணில் உரையாடியிருக்கிறார்.

ஆகவே, பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் காணி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் 1972 இல் இருந்து கொழும்பை மையப்படுத்தி இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் காரண காரியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

அதாவது, சிங்களச் சூழ்ச்சி கருத்தியல் தற்போது பகிரங்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை காணி சீர்திருத்த ஆணைக்குழு கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது. இந்த வல்லமையை இழக்கக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழுவை அமைக்க சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பவில்லை என்பதும் கண்கூடு.

ஆகவே, 2009 மே மாதத்தின் பின்னரான சூழலில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியே நிரந்த அரசியல் தீர்வு என்ற ஆழமான கருத்தை ஒரு வார்த்தையில் நிறுவாமல் பல கட்சிகளாகவும் பல குரல்களாகவும் தமிழ்த்தரப்பு சிதறுண்டு கிடப்பதை, ரணில் தனது அரசியலுக்கு சாதமானதல்ல "இலங்கைத் தேசியம்" என்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்த மிக நுட்பமாக பயன்படுத்துகிறார். ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

ரமணி

கதாசிரியர், ஒளிப்பதிவாளர், எடிட்டர், இயக்குநர் போன்ற பலவற்றில் திறம்படக் கையாண்டவர் கே.ராம்நாத் . 1930 ஆம் ஆண்டு தொழில்நுட்பம் எதுவுமற்ற காலத்தில் தமிழ் சினிமாவில் பல புதுமைகளை அறிமுகப்படுத்திய வல்லவன் கே.ராம்நாத். கே.ராம்நாத்தின் புதுமைகளால் ரசிகர்கள் மட்டுமல்லாது திரைத்துறையினரே மிரண்டனர்.

'பக்தி' (1938) என்ற படத்தில் ஒரு காட்சியில் பஞ்சத்தால் வறண்டுகிடக்கும் பூமியில் நெல் மழை பொழிய வேண்டும். அதை எப்படிப் படமாக்குவது என்று பலரும் யோசித்து யோசித்துக் குழம்பிக் கிடந்தார்கள். அப்போதுதான் ராம்நாத்தின் சிந்தையில் அந்த எண்ணம் தோன்றியது. அதன்படி மினியேச்சர் முறையில் அந்தக் காட்சியைப் படம் பிடித்தார் ராம்நாத். அசந்து போனார்கள் உடனிருந்த திரைத்துறையினர்.

படம் வெளிவந்ததும் ரசிகர்களுக்கு அது நம்பமுடியாத காட்சியாக ஆச்சரியத்தைத் தந்தது. ரசிகர்கள் பல திரையரங்குகளில் அந்தக் காட்சியின்போது அதை ஏதோ தெய்வச்செயல் போலக் கருதி மெய்சிலிர்த்துப் போய் கற்பூரம் ஏற்றி திரைக்குக் காட்டி கும்பிட்டார்களாம். தென்னிந்திய சினிமா வரலாற்றில் மினியேச்சர் முறையில் எடுக்கப்பட்ட முதல் காட்சியாக அது வரலாற்றில் குறிக்கப்பெற்றது.

ஜெமினி தயாரிப்பில் 'தாசி அபரஞ்சி' (1944) படம் உருவானது. அதன் தொடக்கக் காட்சியில் ஒரு கோயில். அதன் கோபுரமும் உட்புறமும் மிகவும் தாழ்வானதாக இருக்க, அதன் உள்ளே இருக்கும் தெய்வம் அபரஞ்சி. அந்தப் புராணக் கதையில் வரும் கோயில் உண்மையில் எங்கே இருக்கிறது என்று எவருக்கும் தெரியவில்லை. அந்தக் காட்சியை எப்படித் தத்ரூபமாக எடுப்பது? எங்கேபோய் அப்படியொரு கோயிலைத் தேடுவது? அதற்கும் ஒரு மினியேச்சர் கோயில் செட்டை வடிவமைத்தார் ராம்நாத். கதையில் சொன்னவாறு மிகவும் தாழ்வாக அமைக்கப்பட்ட அந்த செட்டில் சிறிய உருவம் கொண்ட ஏ.கே.சேகர் படுத்தபடி கமராவுடன் உள்ளே ஊர்ந்து போய் அதைப் படம்பிடித்தார். ராம்நாத்தை அவர் கலைமேதை என்று புகழ்ந்தார்.

ராம்நாத்தின் வியக்க வைக்கும் தொழில் மேதைமைக்கு இன்னொரு சிறந்த சம்பவத்தையும் சொல்லலாம். அது 1939 ஆம் ஆண்டு ஒருநாள் சென்னை நியூடோன் ஸ்ரூடியோவில் பாடல் பதிவு ஒன்றுக்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்தப் பாடலைப் பாடும் பாடகன் ஒரு சிறுவன். அங்கிருந்த மைக் அவனுக்கு அச்சத்தை உண்டாக்கிவிட்டது. அதனால் அவனால் பாடவே முடியவில்லை. இசைக்கலைஞர்கள் குழுமியிருக்க இந்த நிலமையைச் சமாளிக்க ராம்நாத் ஒரு முடிவெடுத்தார். அது பின்னாளில் ஒரு தொழில்நுட்பமாகவே மாறப்போகிறது என்பதை அவர் அன்று அறிந்திருக்கமாட்டார். அன்றைய நிலமைக்கு ஏற்ப அதையொரு தற்காலிக உபாயமாகத்தான் அவர் நினைத்தார்.

அந்தச் சிறுவனால்தானே பாட இயலவில்லை. எனவே, அவனை இன்னொரு நாள் பாட வைத்துக் கொள்ளலாம் அல்லது பின்னொருநாள் வேறு எவரையேனும் பாட வைத்துக்கொள்ளலாம் என்று முடிவெடுத்த ராம்நாத், அந்தப் பாடலின் இசைக் கோவையைமட்டும் பின்னிசையோடு பதிவு செய்தார். முழுப் பாடலின் இசை மட்டும் பதிவாகியது. குரலெடுத்துப் பாடவில்லை அந்தச் சிறுவன்.

அதாவது, இன்றைக்கு கரோக்கி என்கிறார்களே அதுபோல. இப்போது டிராக் பாடுகிறார்கள் அல்லவா அதுபோல, இரண்டு டிராக் ஆகப் பதிவு செய்து இரண்டையும் இணைத்து ஒரு பாடலாக்கிடலாம் என்று அவர் எடுத்த அந்த முடிவு காலத்தால் மிகமிக முன்னோடியானது. அதுவும் இன்றைய வளர்ச்சியை நினைத்துக்கூடப் பார்க்க இயலாத ஒரு காலத்தில் அப்படி அவர் மேற்கொண்ட அந்தச் செயற்பாட்டால் விளைந்த அந்தப் பாடல் மிகப்பெரிய ஹிட் ஆனதாம்.

அதுதான் ராம்நாத் என்ற அந்த மேதையின் கலை மேன்மை. அவரது ஒவ்வொரு படத்திலும் இது போன்ற ஏதாவதொரு சின்னச் சின்னப் புதுமையை முயன்று பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது அந்தக் காலத்து திரைப்பட ஆக்கச் செயற்பாடுகளில் அவர் காட்டிய நுண்ணறிவை நினைத்தால் இப்போதும் வியப்பாக இருக்கிறது.

சென்னையிலிருந்து 'சவுண்ட் அண்ட் ஷேடோ' என்ற சினிமா ஏடு வெளிவந்து கொண்டிருந்தது. அதை முத்துசாமி ஐயர் என்ற முருகதாசாவும் ஏ.கே. சேகர் என்பவரும் நடத்திவந்தார்கள். திருவனந்தபுரம் பூஜைபுராவில் 1912 இல் பிறந்த ராம்நாத் பி.ஏ படித்துவிட்டு சென்னைக்கு வந்தார். அங்கே கோடாக் நிறுவனத்தில் பயிற்சியாளராகச் சேர்ந்தார். அந்த சமயத்தில், புகைப்படக்கலை குறித்த கட்டுரை ஒன்றை எழுதி 'சவுண்ட் அண்ட் ஷேடோ'வுக்கு அனுப்பினார் ராம்நாத். கட்டுரையைப் படித்துவிட்டு பத்திரிகையின் ஆசிரியர்கள் முருகதாசாவும் ஏ.கே.சேகரும் ராம்நாத்துக்கு நண்பர்களானார்கள். அதனால்



'சவுண்ட் அண்ட் ஷேடோ' பத்திரிகையில் ராம்நாத்தும் இணைந்தார். அந்த சமயத்தில்தான் அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்கு கோலாப்பூர் சமஸ்தானப் பகுதியிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், தமிழில் எடுக்க இருக்கும் 'சீதா கல்யாணம்' திரைப்படத்திற்கு உதவ இயலுமா? என்று கேட்டிருந்தது. கடிதத்தை எழுதியவர் பிரபாத் பிலிம்ஸ் நிறுவனத்தின் பார்ட்னரான வி.சாந்தாராம். அதே பிரபல இயக்குநர் சாந்தாராம்தான்.

அதன்படி 'சீதா கல்யாணம்' படத்தின் உதவி இயக்குநராக ராம்நாத் பணியில் சேர்ந்தார். அந்தப் படத்தை பாபுராவ் பெந்தார்கர் இயக்கினார். கே.ராமநாதன் என்றுதான் ராம்நாத் முதலில் படவுலகில் அறியப்பட்டார். 'சீதா கல்யாணம்' 1933 இல் வெளிவந்தது .

முருகதாசாவும் ஏ.கே.சேகரும் ராம்நாத்தும் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் இயங்கி வந்த வேல் பிக்சர்ஸ் ஸ்ரூடியோவின் தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பை ஏற்றார்கள். அங்கு 'மார்க்கண்டேயா', 'பாதுகா பட்டாபிஷேகம்' போன்ற தமிழ் மற்றும் தெலுங்குப் படங்கள் எடுக்கப்பட்டன. அப்போதுதான் முதன்முதலில் கே.ராம்நாத் என்ற அந்த அற்புதத் தொழில்நுட்பக் கலைஞனைத் திரையுலகம் கண்டு வியந்தது.

1942 இல் இரண்டாம் உலகப்போரின்போது சினிமாத் தொழில் ஸ்தம்பித்துப்போனது. ஸ்ரூடியோக்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. அப்போதுதான் ராம்நாத்தும் சேகரும் ஜெமினி ஸ்ரூடியோவில் சேர்ந்திருந்தார்கள். விரைவிலேயே ராம்நாத் தயாரிப்பு நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பேற்றார்.

'கண்ணம்மா என் காதலி', 'மிஸ் மாலினி' போன்ற படங்களின் தயாரிப்பாளரானார். பின்னர் ராம்நாத்தும் சேகரும் ஜெமினியைவிட்டு விலகி ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தில் சேர்ந்தார்கள். அங்கிருந்தும் விலகி கோவை பட்சிராஜா பிலிம்சில் சேர்ந்தார்கள். 'நாடோடி மன்னன்' படத்தை எம்.ஜி.ஆர் இயக்குவதற்கு முன்னர் கே.ராம்நாத்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால், சில காரணங்களால் ராம்நாத் இயக்க இயலாமல் போகவே எம்.ஜி.ஆர் அந்தப் படத்தை இயக்க நேர்ந்தது.

எம்.ஜி.ஆரை ஒரு சூப்பர் ஸ்டாராக உயர்த்திய 'மர்மயோகி' படத்தை ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்தபோது அதனை அற்புதமாக இயக்கியவர் கே.ராம்நாத். அதன்பின்னர் சிறிது காலத்திற்கு எம்.ஜி.ஆரின் விருப்ப இயக்குநராக ராம்நாத் இருந்தார். அந்த 'மர்மயோகி' படம்தான் தமிழில் தணிக்கைக் குழுவால் முதல் 'ஏ' சான்று பெற்ற படம். படத்தில் பேய் ஒன்று வரும். அதை மிகவும் உயிரோட்டமாகப் படமாக்கியிருந்தார் ராம்நாத். அதனால் குழந்தைகள் அதைப் பார்த்து பயப்படக்கூடும் என்று கருதி அந்தப் படத்திற்கு 'ஏ' சான்று அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரத்திற்காகவும் சில படங்களில் பணியாற்றினார் ராம்நாத். தனது வாழ்வில் ஒரு வேண்டாத முயற்சியாக தனது சொந்தத் தயாரிப்பில் 'விடுதலை' என்ற படத்தை எடுத்தார் கே.ராம்நாத். அது ஜான் கால்ஸ்ஒர்த்தியின் 'முதலும் முடிவும்' புதினத்தைத் தழுவியது. அதுவே அவரது முதலுக்கு - முதலீட்டுக்கு முடிவு கட்டியது. ராம்நாத்தை அந்தப் படமுயற்சி கடுமையான பொருளாதாரச் சிக்கலிலும் உளவியல் பிரச்சினைகளிலும் ஆழ்த்தியது. அதுவே அவரை மரணப்படுக்கையில் வீழ்த்தி யது. 1956 இல் தனது 44 ஆவது வயதில் அகால மரணமடைந்தார் ராம்நாத்.

கே.ராம்நாத் தமிழ் திரையுலகின் முத்திரை இயக்குநர்கள் வரிசையில் முக்கியமானவர் மட்டுமல்ல தனித்துவமானவரும் ஆவார். அவரளவிற்குப் பல்திறன் மிக்க இன்னொரு திரைக்கலைஞரைக் காண்பது அரிது என்பதுதான் திரைவிமர்சகர்கள் பலரது கருத்து. அவரை 'ஒரு நபர் நிறுவனம்' என்பார்கள்.

புதிய முயற்சிகளின் மேதைகளில் ஒருவர் இயக்குநர் கே.ராம்நாத். மற்றவர்கள் அளவுக்கு அதிகம் பேசப்படாத - அறியப்படாத கலைஞர் கே.ராம்நாத்.

இயக்குநராக மட்டுமல்லாது ஒரு கதாசிரியராகவும் கமராமானாகவும் ஒளிப்பதிவாளராகவும் எடிட்டராகவும் தயாரிப்பாளராகவும் தமிழ் சினிமாவின் ஆரம்ப நாட்களில் முத்திரை பதித்தவர் ராம்நாத். அப்படிப்பட்ட கலைமேதையை எத்தனை கொண்டாடியிருக்க வேண்டும் நாம்? ஆனால், அவர் குறித்து இன்றுகூட அதிகம் பேசுவோர் இல்லை என்பது வருந்தத்தக்கது.

■

# கல்வியில் உயர்வடைய உதவும் புலமைப்பரிசில்

இலவசக்கல்வி என்பது இலங்கைக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களில் ஒன்று. வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ள மாணவர்களின் கல்வியைத் தொடர்வதற்காக உருவாக்கப்பட்டதே புலமைப்பரிசில் பரீட்சை. கல்வி கற்றலில் ஆற்றல் கொண்ட பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்காகவும் பாடசாலைகளில் தரம் 5 இற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காகவும் தரம் 5 புலமைப்பரிசிலுக்கான பரீட்சை வருடாந்தம் நடத்தப்படுகிறது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மலையகம், நீர்கொழும்பு போன்ற இடங்களின் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்ற வரலாறு உள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் நகரத்தில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வியைத் தொடர்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது. அதேவேளை அந்த மாணவனுக்கு ஊக்கத்தொகையாக சிறு தொகைப் பணமும் கொடுக்கப்படுகிறது.

இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படும் சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவினால் ஆரம்பிக்கப்பட்டதே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை. இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பரீட்சையால் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் கிராமப்புற மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்திபெற்றால் நகரப் பாடசாலைகளுக்கும் நகரத்திலுள்ள பிரபல பாடசாலைகளுக்கும் விண்ணப்பித்துச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது நோக்கமாக வருடாந்த குடும்ப வருமானம் குறைந்த மாணவர்களுக்கு மாதாந்தம் ஒரு தொகை உதவிப்பணம் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவாறு இப் பரீட்சை தொடங்கப்பட்டது.

இந்தப் பரீட்சையால் பல மாணவர்கள் மேல் நிலைக்கு உயர்ந்துள்ளனர். இப்பரீட்சையில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. இருந்தாலும்கூட மலையகப் பெருந்தோட்டப்புற மாணவர்களின் கல்வி நிலை அதிகரித்துக் கொள்வதற்கு இப்பரீட்சை மிக முக்கியமானதாக இருந்தது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பாடசாலைகளுக்கும் இலங்கையின் ஆரம்பக்கல்வியின் தேர்ச்சி மட்டத்தை மேம்படுத்துவதற்கு இப்பரீட்சை பல வருடங்களாக பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது என்பது கண்கூடு.

பாடசாலையில் கற்பதற்கும் வீட்டில் கற்பதற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

ஆசிரியர்களுடைய அர்ப்பணிப்பான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் பெற்றோரின் பங்களிப்பை அல்லது ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் பழைய மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர், நலன்விரும்பிகள், அரசியல் பிரதிநிதிகள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்களிப்பானது பல்வேறு வகையில் இப்பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்திபெற வைப்பதற்கு உதவி செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

5 ஆம் தர புலமைப் பரீட்சை என்பது ஒரு பிள்ளை படித்த விடயங்களை மதிப்பிடும் ஒரு பரீட்சை தான். அது அவர்களது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் தொழில் வாய்ப்புக்கான பரீட்சை அல்ல. கௌரவப் பிரச்சினைக்காக பிள்ளைகளை உளவியல் ரீதியாக பாதிப்படைய வைத்து விடலாகாது.

பிள்ளைகளுக்கென்று ஒரு சுய அடையாளம், ஆளுமை இருக்கின்றது. அந்த வழியில் அந்தப் பிள்ளையை வழிநடத்தி செயற்பட வையுங்கள். பிள்ளையின் கைகளை இறுக்கப் பிடிக்காதீர்கள். முன்னே நீங்கள் நடந்து பின்னால் அவர்களை நடக்க விடாதீர்கள். நீங்கள் பாதைகளைக் காட்டாதீர்கள். நீங்கள் பின்னால் நடந்து முன்னால் அவர்களை விடுங்கள். அவகளுக்கென்று ஒரு பாதையை அவர்களே தெரிவுசெய்து கொண்டு முன்னேறிச் செல்ல வழிவிடுங்கள்.

உறவினர்களின், நண்பர்களின் பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடையும்போது அவர்களை விட கூடுதல் புள்ளிகளைப் பெற வேண்டும் என்ற கருத்தை சிலர் பிள்ளைகளிடம் திணிக்கிறார்கள். அதனால், மாணவர்களின் உளநலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். ஓடி விளையாட வேண்டிய பிள்ளைகளை சிலர் ஒரு இடத்தில் அடைத்து வைத்திருப்பதும் தவறானதாகும். மாணவர்களின் சுய சிந்தனையை வளர்ப்பதே கல்வியின் பிரதான நோக்கம். பொழுதுபோக்கு, விளையாட்டு, வாசிப்பு போன்றவற்றையும் கல்வியுடன் சேர்த்து மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் புறச் செயற்பாடுகளை சில பெற்றோர் தடை செய்கிறார்கள். சில பெற்றோர் மூன்றாம் வகுப்பிலேயே மாணவர்களை தயார்ப்படுத்துகிறார்கள். சிலர் 4 ஆம் தரத்தில் தயார்ப்படுத்துகிறார்கள். இது மாணவர்களுக்கு வழிகாட்டும் பரீட்சை என்பதை பெற்றோர் உணர வேண்டும். சிறுவனான மாணவனின் தலையில் மட்டுமல்லாமல் முதுகிலும் சுமை ஏற்றப்படுகிறது. பரீட்சை வினாத்தாள்கள், வழிகாட்டிகள் என புத்தகப் பையினுள் ஏற்றப்படும் சுமையைக் குறைக்க வேண்டும்.

10 வயது என்பது கையில் பந்துடனும் மட்டையுடனும் விளையாட வேண்டிய வயது. விளையாட்டை நேசிக்கும் அளவுக்கு அந்த வயதில் பிள்ளை படிப்பை விரும்புவதில்லை. மனதின் செயற்பாடுகள் விளையாட்டை நேசிக்கக் கூடியதாகவே இருக்கும். அம்மாக்களும் “படிபடி” என்று அந்தப் பிள்ளையை ஆளத் தொடங்கி விடுகிறார்கள். அந்தச் சின்னஞ் சிறார்களை வதைக்கின்றார்கள். மேலதிக வகுப்புக்களுக்காக சற்றுக்கூட ஓய்வில்லாமல் இழுத்துக் கொண்டு பிள்ளையின் உடம்பு மட்டுமன்றி உள்ளத்தையும் களைப்படைய வைக்கிறார்கள். இதனால் பிள்ளை உளவியல் ரீதியாக பெரிதும் பாதிப்படைகின்றது.

வேலைக்குச் செல்லும் பெற்றோர்களாக இருப்பார்களானால் அவர்களது கஷ்டங்கள் இரட்டிப்பாகும். அதிகாலையில் நான்கு அல்லது ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்கும் பிள்ளைகள் மாலை ஆறு ஏழு மணி வரைக்கும் பாடசாலைப் பாடங்களிலும் மேலதிக வகுப்புக்களிலும் ஓய்வின்றி கழிக்கின்றார்கள். வீடு வந்து சேரும் பிள்ளையிடம் எதுவுமே பேச முடியாத, அடுத்த நாளுக்குரிய நிகழ்வுகளைக் கேட்டுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.
களைப்பினால் தூங்கி விடுகின்றார்கள். சில அம்மாக்களின் கௌரவப் பிரச்சினையால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மாணவர்கள் கல்வியில் உயர்வடைவதற்கு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மிகவும் முக்கியமானது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ■

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945
LEARN EASY KNOWLEDGE IS POWER

# நினைவுகளில் வாழும் ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் தெணியான் (1942-2022)

38 முதல் சந்திப்பு










சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் (1970 களில்), மல்லிகை இதழில் தெணியானின் எழுத்துக்களை படித்துக்கொண்டிருந்தேன்.

1973 ஆம் ஆண்டு அவரது "விடிவை நோக்கி" நாவல், வீரகேசரியில் பிரசுரமாக வெளிவந்தது. அச்சமயம் நான் வீரகேசரியின் நீர்கொழும்பு பிரதேச நிருபர்.

எமது இலக்கிய வட்டத்தின் சார்பில் இந்த நாவலுக்கு எங்கள் ஊரில் ஒரு அறிமுகவிழாவை ஏற்பாடு செய்வதற்கு, மல்லிகை ஜீவா மூலம் தெணியானுக்குத் தகவல் அனுப்பியிருந்தேன். தெணியான் தன்னுடன் இரண்டு நண்பர்களை அழைத்து வந்திருந்தார். அவர்கள்: கிளார்க்கர் அய்யா என்ற இராஜேந்திரம், சதானந்தன் மாஸ்டர். எங்கு சென்றாலும் இவர்கள் மூவரும் ஒன்றாக நிற்பார்கள் என்ற செய்தியையும் அப்போது அறிந்துகொண்டேன்.

வந்தவர்கள் வதிரியைச் சேர்ந்த அன்பர் சதாசிவம், எங்கள் ஊரில் பூட் எம்போரியம் என்ற பாதணிக் கடையை நடத்தி வந்தார். வடமராட்சியிலிருந்து வந்த மூவரும் சதாசிவம் வீட்டில் தங்கியிருந்தனர்.

விடிவை நோக்கி அறிமுக விழா, எங்கள் ஊரில் 1966 இல் "அண்ணி" என்ற இலக்கிய இதழை நடத்திய, உறவு முறையில் எமது மாமாவான அ.மயில்வாகனன் தலைமையில் நடந்தது.

கொழும்பிலிருந்து இலக்கிய ஆர்வலர் எம்.கிஸார், தனது காரில் மல்லிகை ஜீவா, மு.கனகராஜன், தெளிவத்தை ஜோசப் ஆகியோரை அழைத்து வந்தார்.

அந்த விழா வெகுசுவாரசியமாக நடந்தது. அதனைப்பற்றி அடுத்தவாரம் வெளிவந்த தேசாபிமானியில் (கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடு) மு.கனகராஜன் எழுதியிருந்தார். இவ்வாறு தெணியானுடன்1973 ஆம் ஆண்டு தொடங்கிய இலக்கிய நட்புறவு, சகோதர வாஞ்சையாக வளர்ந்தது.

கடந்த ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அவர் மறைந்தார். ஆண்டுதோறும் அவரது பிறந்த தினம் வரும் ஜனவரி மாதம் 06 ஆம் திகதி முடிந்தவரையில் அவருக்கு வாழ்த்துக்கூறுவதும் எனது கடமையாக இருந்தது.

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர் கொண்டிருந்த தெணியான், ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமை. பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த நடேசன் இலக்கிய உலகில் பிரவேசித்ததும் "தெணியான்" என்ற பெயரில் எழுதத் தொடங்கி, அதுவே நிலைத்து விட்டது.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவரான தெணியான் மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர் கே.டானியலின் வாரிசு எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பல நாவல்களும் சில விமர்சனக் கட்டுரைத்தொகுதிகளையும் வரவாக்கியிருக்கும் தெணியானின் "பாதுகாப்பு" என்ற சிறுகதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதியில் வெளிவந்தது. இச்சிறுகதை தற்போது இலங்கைப் பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ் பாடநூலிலும் இணைந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை பிணைப்பு வெளியானது. அதனைத்தொடர்ந்து, மல்லிகை, ஞானம், யாழ்.முரசொலி, வீரகேசரி, தினக்குரல் உட்பட பல இதழ்களில் அயராமல் எழுதியிருப்பவர்.


முருகபூபதி

இவருடைய கழுகுகள் (நாவல்), சொத்து (சிறுகதைத்தொகுதி), குடிமைகள் (நாவல்) என்பன தமிழ் நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச் மற்றும் கறுப்புப் பிரதிகள் முதலானவற்றின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்.கிளையின் செயலாளராகவும் இயங்கியிருக்கும் தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மாகாண அமைச்சுப்பரிசு, யாழ்.இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, தமிழ் நாடு கு.சின்னப்பாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது, இலங்கை அரசின் உயர் விருதான சாகித்திய ரத்னா விருதும் பெற்றவர்.

இலங்கை வானொலிக்காக பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் க.சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றிய நூல்களையும் வரவாக்கியிருப்பவர்.

தான் கற்ற, ஆசிரியப் பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும் மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூலினதும் தொகுப்பாசிரியருமாவார். தெணியானின் தம்பி நவம் கனடாவில் நடத்திய "நான்காவது பரிமாணம்" இதழின் சார்பில் வெளியான "மரக்கொக்கு" நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தெணியானின் மணிவிழாக்காலத்தில் (2003), இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலை எழுத்தாளர் கொற்றை கிருஷ்ணானந்தன் தொகுத்திருக்கிறார்.

தெணியானின் பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும் "தெணியானின் படைப்புகள் மீதான பார்வை", "தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்" ஆகியனவற்றை யாழ். ஜீவநதி, 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டது.

இலங்கையில் மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டி கௌரவித்துள்ளன.

பொற்சிறையில் வாடும் புனிதர்களின் விடிவை நோக்கிக் குரலெழுப்பியவர். வடபுலத்தில் அடிநிலை மக்களின் போராட்டங்களிலும் ஆலயப் பிரவேசப் போராட்டங்களிலும் பங்கேற்ற தெணியான், ஆலயத்துக்குள் எம்மால் பிரவேசிக்க முடியாத மூலஸ்தானம் வரையும் சென்று பூசை செய்யும் ஐயர்களின் அவல வாழ்வையும் சித்திரித்தவர்.

உளவியல் ரீதியாகவும் அவரால் எழுத முடிந்திருக்கிறது. (காத்திருப்பு, கானலில் மான் நாவல்கள்) மல்லிகையில் 'பூச்சியம் பூச்சியமல்ல' என்ற வாழ்க்கைச்சரிதத் தொடரை 24 அத்தியாயங்களில் எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து படித்த பொழுதுதான் தெணியான், தனது அன்றாடச் சம்பவங்களையெல்லாம் திகதி குறித்துப் பதிவு செய்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.

வடமராட்சியின் பொலிகண்டிக் கிராமத்தில் அந்தப் பனங்கூடல்களுக்கூடாக சைக்கிளிலும் கால்நடையாகவும் உலா வந்து கொண்டிருந்த தெணியானின் மூச்சு, இன்னமும் அங்கே பரவியிருக்கும் என்ற குருட்டு நம்பிக்கையுடன் கடந்த ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி விடைபெற்ற எங்கள் தெணியானை நினைவு கூர்ந்து இந்தப் பதிவை எழுதுகின்றேன். ■

# கண்ணதாச ரசம்-02

சமரபாகு சீனா உதயகுமார்

"எங்கள் தங்கராஜா" திரைப் படத்தில் இடம்பெற்ற பாடல், இது. கே.வி.மகாதேவன் இசையமைக்க சௌந்தர்ராஜன், சுசீலா ஆகியோர் பாடிய பாடல்

**"இரவுக்கும் பகலுக்கும் இனி என்ன வேலைஇதயத்தில் விழுந்தது திருமண மாலை" ஆகும்.**

**"இரவுக்கும் பகலுக்கும் இனி என்ன வேலை**
**இதயத்தில் விழுந்தது திருமண மாலை**
**உறவுக்கும் உரிமைக்கும் பிறந்தது நேரம்**
**உலகம் நமக்கினி ஆனந்த கோலம்**
**இருவர் என்பதே இல்லை இனி நாம்**
**ஒருவர் என்பதே உண்மை**
**ம்ம்... இருவர் என்பது இல்லை இனி நாம்**
**ஒருவர் என்பதே உண்மை"**

உறவுகளில் மிகவும் உன்னதமானது திருமண உறவாகும். ஆனந்த மயக்கம் தரக்கூடியது, அது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மனங்களால் (இதயங்களால்) ஒன்றிணைந்துவிட்டதாலே பேரானந்தம் கொள்ளும் இரு காதலர்களுக்கான பாடல், இதுவாகும்.

இதயங்கள் இணைந்துவிட்டாலே இருவருக்குமான உறவின் உரிமை அதிகம் என்கின்றனர், காதலர்கள்.

உரிமை அதிகம் என்பதால், இருவருக்கும் இடையிலான மொழி பெருமை பெறுகிறது. மொழி பெருமை பெறும்போது ஒருவரை ஒருவர் தொட்டுப் பேச ஆர்வம் பெறுகின்றனர்.

இருவரும் தங்கள் உறவினை நெருக்கி உடல்களால் பின்னிப் பிணைகிறபோது, உலகிலே இதைவிட ஆனந்தம் எதுவுமே இல்லை என்றாகின்றனர். அந்த சொர்க்கக் கணமே இருவரும் இருவரில்லாத ஒருவரான நிலை என கண்ணதாசன் பாடுகிறார்.

இப்படி இருக்கையில், காதலன் என்ன சொல்கிறான் தெரியுமா?



இரவுக்கும் பகலுக்கும் இனி

**"பாதி கண்ணை மூடி திறந்து பார்ப்பதில் இன்பம்**
**பாதி தூக்கத்தில் கூந்தலை தடவி ரசிப்பதில் இன்பம்"**

இருவரும் பஞ்சணையில் தூங்குகிறபோது, அவள் அருகே இருப்பதால் ஆனந்தமான தூக்கம் அவனுக்கு வருகிறது. அதே நேரத்தில் அவளை அணைக்கத் துடிக்கும் ஆவலினால் அவனுக்கு தூக்கம் வர மறுக்குறதாம்.

இரண்டுமே இன்பமயம்தான். இதனால், அவள் கூந்தலைத் தடவித் தடவி ஆஹா! இதுவல்லவா சொர்க்க சுகம் என காதலன் ரசிக்கிறானாம்.

இதனால் என்ன ஆனார்கள் என்றால்,

**"பாதி பாதியாய் இருவரும் மாறி**
**பழகும் வித்தையே பள்ளியில் இன்பம்**
**காலை என்பதே துன்பம் இனிமேல்**
**மாலை ஒன்றுதான் இன்பம்"**

அதாவது, உடலால் பாதிபாதியாகி இணைகின்றனராம். சிற்றின்ப நிலையும் இதுதானே. இந்த இன்ப நினைவுகள் உள்ளத்திற்குள் ஊசலாடும்போது காலை வேண்டாம் மாலைப்பொழுதுதான் என்றும் வேண்டுமென இருவரும் ஆவல் கொள்கின்றனர். ஏனென்றால், காதலர்களுக்கு உகந்தபொழுது அதுதானே..!

மேலும், தம்மை மறந்து ஒன்றாகிப்போன நிலையில், காதலி என்பவள்தான் களைந்தெறிந்த ஆடைகளை எடுப்பதற்குப் பதிலாக, வீட்டினுள்ளே வந்து தெறிக்கின்ற நிவுக்கீற்றினை எடுக்கிறாளாம். அந்தளவுக்கு, காமமயக்கம் அவளை ஆராதித்திருக்கிறது.

**"ஆடை எதுவென நிலவினை எடுக்கும் ஆனந்த மயக்கம்**
**அம்மா குளிரென ஒன்றினை ஒன்று அணைப்பது பழக்கம்"**

இதுமட்டுமில்லையாம், மாலை



யில் தொடங்கி காலைவரை தொடர்ந்த காம வித்தையால் தனக்கு எத்தனை காயம் என்பதை அவள் சொல்கிறாள். அப்படி தன் உடல் அங்கம் ஒவ்வொன்றையும் காதலன் தன் உதடுகளாலும் பற்களாலும் நகங்களாலும் மென்மை செய்து இனிமையாகக் காயப்படுத்தியுள்ளான் என்பதையும் காதலி ரசனையோடு சொல்கிறாள்.

**"காலை நேரத்தில் காயங்கள் பார்த்து**
**தவிப்பதென்பது கவிதையின் விளக்கம்**
**கவிஞர் சொன்னது கொஞ்சம் இனிமேல்**
**காணப்போவது மஞ்சம்"**

இதைவிட வேறென்ன சொர்க்கம் காதலர்களுக்கு வேண்டும்? காதலர்கள் சார்பாக காதல் லீலை மொழி சொல்லும் கண்ணதாசனே! இந்தப் பூமியில் இனிய காதலர்கள் உள்ள வரை உன்னை எவரும் மறவார் மறவார் என்பது உண்மைதானே!

**தொடரும்...**

# தமிழ் நூல்களுக்கான பரிசளிப்புத் திட்டம்

அவுஸ்திரேலியாவில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக தமிழ் இலக்கியம் மற்றும் கலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கையில், வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்றை கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இலங்கையில் வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் இயங்கிவருகிறது. கடந்த ஆண்டுகளில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களுக்காக நடந்த தெரிவில், பரிசுபெற்ற எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் ஏற்கெனவே ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் இந்த பரிசளிப்புத் திட்டம் இம்முறையும் இலங்கை தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

இந்தத்திட்டம் கீழ்வரும் தேவைப்பாடுகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

**1.** கடந்த 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை ஆகிய நான்கு துறைகளில் வெளியான தமிழ் நூல்களே இந்தத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

**2.** ஒவ்வொரு துறையிலும் சிறந்ததாகத் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு நூலுக்கும் தலா 50 ஆயிரம் இலங்கை ரூபா பரிசாக வழங்கப்படும்.

**3.** நூலாசிரியரின் முழுப்பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை அடங்கிய சுயவிபரக் குறிப்பொன்றினையும் நூலுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

**4.** நூலின் இரண்டு பிரதிகள், எதிர்வரும் 31.07.2023 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக இதில் தரப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**5.** நடுவர்களின் தீர்ப்பையடுத்து பரிசுக்குத் தெரிவான நூல்கள் பற்றிய விபரம் பத்திரிகைகள், இதழ்கள், இணைய ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் என்பதுடன் பரிசு பெற்றவர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் அறியத்தரப்படும்.

**6.** நூலாசிரியர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், வேறெந்த நாட்டின் பிரஜா உரிமையோ அல்லது வதிவிட உரிமையோ இல்லாதவராகவும் வேறெந்த நாட்டிலும் இப்பொழுது வசித்துக்கொண்டிராதவராகவும் இருத்தல் வேண்டும்.

நூல்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

Dr. Nadesan
Secretary
Australia Tamil Literary & Arts Society
No 10, THERESA STREET,
BENTLEIGH
VICTORIA 3204
AUSTRALIA

**மின்னஞ்சல்:** atlas25012016@gmail.com

தொடர்கதை

26

# இரு மலர்கள்

யாழ் சத்யா



மதிய உணவு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இவனுக்கு தாகம் அதிகம் எடுக்க இடது கையால் தண்ணீர்ப் போத்தலை எடுத்து திறக்க முனைந்தான். இடது கையிலும் சுற்றி கட்டுப் போட்டிருந்த படியால் அவனால் திறக்க முடியாமல் தனது தேவைக்கு இன்னொருவரையும் நாட விரும்பாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான்.

அன்றைய பயிற்சி வகுப்பு முடிந்து மற்றைய வைத்திய மாணவர்கள் மதிய உணவு இடைவேளைக்காக வெளியே சென்றிருக்க, கவி அங்கே கடமையிலிருந்த வைத்தியரோடு கதைத்துக் கொண்டிருந்தவள் எதேச்சையாக யாதவ் தண்ணீர்ப் போத்தலோடு போராடுவதைப் பார்த்து விட்டு அவனிடம் விரைந்தாள்.

அவனிடமிருந்து போத்தலை வாங்கி திறந்து அருகிலிருந்த சிறிய கபேர்ட்டின் மேல் வைத்துவிட்டு, அவனை முதுகுப்புறமாக கைகொடுத்து தோளாடு அணைத்து எழுப்பி கட்டிலிலே பின்புறம் அணையாக தலையணையை வைத்து அவனை சற்றே சாய்ந்த வாக்கில் அமர்த்திவிட்டு தானே தோளோடு அணைத்து தண்ணீரை பருக்கலானாள்.

யாதவ் தான் காண்பது கனவா? நனவா? என்று புரியாமலே தண்ணீரை அருந்தலானான். பார்வையாளர்கள் நேரம் ஆரம்பித்து இருக்க உணவுடன் வந்த சுந்தரலிங்கம் தம்பதி இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே அசந்து போய் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள்.

ஒரு தாய்க்கே உரிய பரிவுடன் சிறு குழந்தை ஒன்றிற்கு தண்ணீர் புகட்டுவது போல அன்பாக கொடுத்துக் கொண்டிருந்த கவின்யாவைப் பார்த்ததுமே வசந்தா முடிவெடுத்து விட்டார். ‘நீ தான் என் மருமகள் பெண்ணே- ஆனால், எனக்கு மகள் இல்லாத குறையை உன்னை வைத்து தீர்த்துக் கொள்கிறேன்’ என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

‘ரெண்டு பேரும் என்ன பொருத்தமா இருக்காங்க இப்படியே காலம் பூராக சந்தோசமா வாழ வை நல்லூர் கந்தா’ மனமுருக வேண்டிக் கொண்டார் சுந்தரலிங்கம்.

இவர்கள் உள்ளே நுழையவும் தண்ணீரப் போத்தலை மூடி வைத்து விட்டு யாதவின் காலில் எழுதியிருந்த கவிதையை வாய் விட்டு வாசித்துக் கொண்டிருந்தாள் கவின்யா.

“என்னடா கறுமம் இது…? காலில போய் கவிதை எழுதி வைச்சிருக்கிறாய்…”

தலையிலடிக்காத குறையாக வசந்தா கேட்டார்.

“நா எப்பிடிம்மா இந்தக் கைகளால எழுத முடியும்? டயரில எழுதுண்ணு அனுட்ட சொன்னனம்மா… அவள் தன்ர குணத்தைக் காட்டிட்டாள்… உங்கட ப்ரண்ட் அனுஷியாதான்..”

தாயிடமும் மீதியை இவளிடமும் பாவப்பட்ட பிள்ளை போல முகத்தை வைத்துக் கொண்டு கூறினான் யாதவ்.

“அனுவக்கா வேலையா இது… அதுக்கேன் அவவைத் திட்டிறிங்க? அழகான கவிதை, அழகாகத் தானே எழுதி இருக்கா… சரி நீங்கள் கதையுங்க… நான் போய்ட்டு வாறன் ஆன்ட்டி, அங்கிள்… ஆ… அப்புறம் ஒரு விசயம்… அண்ணாக்கு துணையாக யாரும் கூடவே இருந்தால் நல்லம். பாவம் தண்ணி குடிக்கவே அந்தரப்படுறார்… சரி… நான் வாறன்… டேக்கெயார் அண்ணா…” என்றபடி போனவளைப் பார்த்து விக்கித்துப் போய் அமர்ந்திருந்தான் யாதவ்மித்ரன். பின்னே அவள் நினைவாய் அவன் காதல் கவிதைகளாய் வடித்துக் கொண்டிருக்க அவன் மனம் கவர்ந்தவளோ “அண்ணா” என்றழைத்தால் பாவம் அவனும்தான் என்ன செய்வது. அவள் பரீட்சை முடியும் வரை வாய்மூடி மௌனம் சாதித்தே ஆகிய கட்டாயத்தில் வாளாதிருந்தான் யாதவ்.

வசந்தா ஒவ்வொரு கவளமாக உணவை ஊட்டிவிட பள்ளி செல்லும் மழலையாய் வாங்கி உண்டு கொண்டிருந்தவன் உள்ளம் எல்லாம் கவியின் சிந்தனையிலேயே இருந்தது. திடீரென ஞானம் வந்தவனாக,

“நான் ஹொஸ்பிடலால வந்ததும் மூண்டு பேருமா காஞ்சிபுரத்திற்குப் போய் எல்லா சாரியளையும் எங்களுக்குப் பிடிச்ச மாதிரி சொல்லி நெய்விச்சு எடுத்து வருவமப்பா…”

“அதுக்கென்ன… போய் வந்தா போச்சு… வெடிங் ஹோலில ரெண்டு மாசத்தால வாற எந்த ஓடரும் எடுக்க வேணாம் என்று சொல்லிட்டன்…”

“வெரிகுட்பா… நானே சொல்லுவம் என்றிருந்தன்… இந்தியால உடுப்பை எடுத்துக்கொண்டு சிங்கப்பூர்ல போய் நகைகளை எடுத்திட்டு வருவமப்பா…”

“ஓகே தம்பி… நீ இதுகளைப் பற்றி ரென்சன் இல்லாம இரு. அப்பா விஸா, ரிக்கட் அலுவல்களைப் பார்த்துக் கொள்ளுறன்…”

“சரிப்பா… அனுவுக்கு லீவ் கிடைக்கும் என்றால் அவளையும் கூட்டிட்டு போவம்… அவளுக்கு கொஞ்சம் கவிட டேஸ்ட்டுகள் தெரியும்… ஆனால், இந்தக் குரங்கு தனக்கு லீவ் இல்லை அது இதென்று ஏதாவது சீனைப் போடும்…”

“அப்பாவும் பிள்ளையும் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேட்கிறியளா…?”

“என்னம்மா…? நகையெடுக்க டுபாய் போகப் போறிங்களா…?”

கேட்ட மகனைப் பார்த்து முறைத்தார் வசந்தா.

“கல்யாணத்துக்கு உடுப்பு, நகைக்கு முதல் தேவை பொம்பிளை. கவி இன்னும் சம்மதம் சொல்லேல என்றதை ஞாபகம் வைச்சுக்கொள். அனுட அண்ணாவை தானும் அண்ணனா எண்டு நினைச்சு கதைச்சிட்டுப் போகுது அந்தப்பிள்ளை… அது மனசில வேற யாரையும் நினைச்சு வைச்சிருந்தா நீ பிறகு ஏமாந்து போவாய்டா… அப்புறம் அதை உன்னால தாங்க முடியாது… அதனால அம்மாட கதையைக் கேட்டு கவிக்கு சோதினை முடியிற வரை கொஞ்சம் பொறுமையா இரு கண்ணா…”

வசந்தா சொன்னதைக் கேட்டு நீர் விட்ட ணைத்த அடுப்பாய் பொசுக்கென வற்றிப் போனது யாதவின் உற்சாகம் எல்லாம். ஆனாலும் தாய் சொன்னதன் யதார்த்த நிலை விளங்கி அமைதியானான்.

நாட்களும் கடந்தன. இரு வாரங்களில் வீடு திரும்பிய யாதவ் கொழும்பு செல்லவில்லை. தொலைபேசியிலேயே முடிந்த வரை தொழிலைக் கவனித்தான். அவன் நேரிலேயே சென்றாக வேண்டிய விடயங்களுக்கு சுந்தரலிங்கம் சென்று வந்தார். தாயாரின் அரவணைப்பிலும் அன்பான உணவிலும் ராப்பகல் பாராத கவியின் நினைவுகளிலும் அவன் வேகமாகவே குணமடைந்து கொண்டிருந்தான்.

அங்கே ஸாமோ கவியின் பெறுபேறுகளிற்காக வேண்டிக் கொண்டு எப்போது போய் பெண் கேட்பது என்று யோசித்துக்கொண்டிருந்தான். இனியும் தாமதம் செய்ய தன்னாலியலாது என்று கவியின் பரீட்சை முடிந்த அடுத்த நாளே கவியின் வீடு செல்லப் போவதாக அருண்யாவிடம் தெரிவித்தான்.

அந்த அவசரக்குடுக்கையும் அதை உடனடியாக கவியிடம் சொல்லி அவளும் மிகவும் மகிழ்ச்சியோடு பரீட்சைகளை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இறுதியில் கவின்யாவின் கரம் பிடிக்கப் போகும் கண்ணாளன் யார்?

ஆறு வருடங்களாக பொறுமையாக காத்திருக்கும் ஸாம் அபிஷேக்கா? அல்லது இரண்டு மாதங்களே காத்திருக்க முடியாமல் தவிக்கும் யாதவ்மித்ரனா?

(மலரும்…)

# புதுமைப் பரிசு

ஓ.கே.குணநாதன்



சிறுகதை

பகோடாக் காதரின் உருவ அமைப்பை உருக்கி வார்த்த தோற்றமுடையவர்தான் கந்தசாமி. அந்தப் பாரிய உடலைக் கொண்ட அவருக்கு தான் ஒரு கமலஹாசன் என்று நினைப்பு.

தெரு அளப்பதே அவருடைய தொழில் என்றாலும் ஆள் பெரிய தண்ணிச்சாமி. பொட்டைகளைக் கண்டு விட்டாலே போதும். ஆள் பெரிய நடிகனாகவே மாறி விடுவார்.

ரஜனிகாந்தின் ‘ஸ்டைல்’ நடை அளந்து ராஜேந்தரைப் போல விழுந்து கிடக்கும் தலைமயிரை வாரிக்கோரி ஒரு மூலையில் எறிந்து விட்டு காதல் மன்னன் ஜெமினி கணேசனைப் போல ஒரு பார்வை பார்ப்பார்.

சில வேளைகளில் விஜயகாந்த் என்ற எண்ணத்தில் அருகில் உள்ள மதிலில் தாவி ஏறி இருந்து கலைஞர் கருணாநிதியின் காதல் வசனங்களை உதிர்த்திடுவார்.

அவருடைய மூஞ்சியையும் காதல் வசனத்தையும் அவதானித்த பெண்கள் குழாமோ அவரைப் பார்த்து ‘கந்தா! கடம்பா! இது என்ன உடம்பா? ஆளைப் பார்த்தால் பீப்பா’ என்று கூறிச் சிரித்தவுடன் கந்தசாமி ஒரு கை ஓசையில் வரும் பாக்கியராஜ் போல ஊமையாகி, முகமெல்லாம் சுருண்டு கொறக்காப்புளி போல் மாறிவிடும்.

கந்தசாமிக்கு வள்ளி என்ற பெண் மீது ஒரு கண். அதனால் வள்ளி வரும் நேரம் ஒரு மதிலின் மீது ஏறி அமர்ந்து கொண்டு கவிஞர் வைரமுத்துவை காப்பியடித்து சிவாஜி பாணியில் வசனங்களைப் பேச ஆரம்பித்தார்.

‘அன்பினும் இனிய வள்ளி! என் இதயத்தை அள்ளிச் செல்கிறாய் நீயும் தள்ளி, நானோ வருகிறேன் பின்னால் துள்ளி உன்னிடம் பள்ளி கொள்ள இல்லையேல் நானும் போவேன் காதலைக் கிள்ளி, முடிவில் வருவதோ எனக்கு கொள்ளி’

இதைக் கேட்ட வள்ளிக்கு கந்தசாமி மீது ஒரு இரக்கம் பிறந்தது. திரும்பிப் பார்த்து சென்று விட்டாள்.

அதன் பிறகு கந்தசாமி தனது கவச வாகனத்தை (பைசிக்கிளை) எடுத்துக் கொண்டு வள்ளியின் திருமுகத்தைக்காண அவளது வீட்டுக்கு முன்னால் வலம் வருவார்.

தினசரி வலம் வந்தாலும் ஒருபோதும் அவளது திருமுகத்தைக் கந்தசாமியால் காண முடியவில்லை.

ஒரு நாள் வழமைபோல் கவச வாகனத்தை எடுத்துக்கொண்டு அவ்வீதி வழியால் பவனி வந்து கொண்டிருந்தார்.

அப்போது தற்செயலாக வள்ளியைக் கண்டு விட்டார். வள்ளியைப் பார்த்து பல் இளித்த வண்ணம் திரும்பிப் பார்த்துக் கொண்டே வாகனத்தை முன் செலுத்திக் கொண்டேயிருந்தார்.

அப்போது பக்கத்து வீட்டில் உள்ள ஒரு வேலைக்காரப் பையன் கழிவுக் குப்பைகளை பையில் கொட்டுவதற்காக பையை தலையில் சுமந்த வண்ணம் தெருவைக் குறுக்கறுத்துக் கொண்டிருந்தான்.

அவன் மீது கந்தசாமியின் சைக்கிள் மோதிக் கொண்டது.

கந்தசாமி கீழே, பைசிக்கிள் மேலே, பையில் இருந்த குப்பைகள் எல்லாம் கந்தசாமியின் தலை மேலே சிதறிக் கொட்டப்பட்டு விட்டது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்து சனங்கள் ஒன்று கூடி விட்டார்கள்.

இவை அனைத்தையும் அவதானித்த வள்ளிக்கு கந்தசாமி மேல் காதல் பிறந்தது. பின்பு காதலாக இருந்தது. இரண்டு வாரங்களில் கசிந்து கண்ணீர் மல்கி கல்யாணத்தில் போய் முடிந்தது.

ஆனால், வள்ளி மிகவும் ஒல்லியாக இருப்பது கந்தசாமிக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

எனவே, மனைவியை அழைத்துச் சென்று அருகில் உள்ள டாக்டரிடம் காட்டினார். அதற்கு டாக்டர் ‘இரும்புச்சத்து குறைவாக உள்ளது’ என்றார்.

எப்படியாவது மனைவியைத் தெளிய வைக்க வேண்டும் என்ற ஆதங்கம் வரவே கோழிமுட்டை வாங்கிக் கொடுப்போம் என்று எண்ணி முட்டையை ஊரில் வாங்குவதற்காகச் சென்றார்.

அங்கு சற்று விலை அதிகமாக இருக்கவே டவுனுக்குச் சென்றால் மலிவு விலையில் வாங்கலாம் என்றெண்ணி பைசிக்கிளில் டவுனுக்குச் சென்று மலிவு விலையில் பல முட்டைகளை வாங்கி எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி வந்தார்.

வரும் வழியில் வெடிகுண்டு ‘செக்கிங்’ பண்ணும் வகையில் பார்சல் நசித்துப் பார்க்கப்பட்டது.

கந்தசாமி வீட்டிற்கு வந்து பார்சலை அவிழ்த்துப் பார்த்த போது எல்லா முட்டைகளும் உடைந்து காணப்பட்டன.

ஒரு நாள் கந்தசாமி ‘இதோ பார் என் மனைவிக்கு இரும்புச் சத்தைக் கூட்டிக் காட்டுகிறேன்’ என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, மனைவிக்குத் தெரியாமல் குசினிக்குள் சென்று மனைவி சமைத்து வைத்திருந்த சொதிக்கறிச் சட்டிக்குள் ஒரு இரும்பைப் போட்டு விட்டு நைசாக வந்து விட்டார்.

சிறிது நேரத்தின் பின்பு இருவரும் சாப்பிடச் சென்ற போது அங்கு குசினிக்குள் சொதி வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது.

உடனே மனைவி சட்டியைத் திறந்து பார்த்தாள். சட்டிக்குள் ஒரு இரும்புத் துண்டு மட்டும் கிடந்தது. அத்துடன் இரும்பு போட்ட பாரத்தில் சட்டியும் வெடித்திருந்தது.

இதைக் கண்டதும் வள்ளிக்கு சிரிப்புத்தாளவே முடியவில்லை. ஆனால், கந்தசாமியோ தான் செய்த மொக்கு வேலையை நினைத்து தலை குனிந்திருந்தார்.

குடியின் பிடியில் சிக்கிய கந்தசாமியை வறுமை வாட்ட ஆரம்பித்தது. மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பினால் நல்ல பணம் சம்பாதிக்கலாம். அத்துடன் வெளிநாடு சென்று வந்தால் மனைவியும் தெளிந்து விடுவாள் என்ற அவருடைய குள்ளநரி மூளை வேலை செய்யவே நண்பர்களின் ஆலோசனைப் படியும் உதவியின் மூலமும் ஒருவாறு மனைவியை குவைத் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

மனைவியின் வெளிநாட்டுப் பணத்தினால் தினசரி இங்கிலீசுப் ‘பிளேன்டீ’ (சாராயம்) குடித்து விட்டு ஏ,பீ, சீ, டீ தெரியாத கந்தசாமி போவோர் வருவோரிடம் சரளமாக ஆங்கிலம் பேசிடுவார்.

இப்படியாக ஒரு பூரணை தினத்தன்று இங்கிலீசுப் ‘பிளேன்டீ’ குடித்துவிட்டு இரவு பத்து மணியளவில் ‘டவுனி’ லிருந்து சைக்கிளில் வரும் போது பொலிஸ்காரன் ‘லைட்’ எங்கே என்று கேட்க, கந்தசாமி ஏதோ (ஆங்கில அகராதியிலே இல்லாத) ஆங்கிலத்தில் பேசி சந்திரனைக் காட்டவே கோபம் கொண்ட பொலிஸ்காரன் கந்தசாமிக்கு முதுகு நிரம்பக் கொடுத்தனுப்பி விட்டான். இதனால் மனமுடைந்த கந்தசாமி வீட்டுக்கு வந்தவுடன் ‘இதோ தற்கொலை செய்கிறேன்!’ என்று பலமாகக் கத்திவிட்டுக் கிணற்றிலே குதித்துவிட்டார்.

இச்சத்தத்தைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரர்கள் அக்கிணற்றையே குழுமிவிட்டார்கள். ஆனால், கந்தசாமிக்கோ நீரில் பட்டவுடன் மப்பு முறிந்து விட்டது.

சனத்தைக் கண்டதும் வெட்கம் தலைக்கேறவே கிணறு இறைப்பது போல் பாசாங்கு செய்து கொண்டார். வள்ளி வெளிநாட்டுக்குப்போய் மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டன. அன்று வள்ளியிடமிருந்து கந்தசாமிக்கு நீண்டதொரு கடிதம் வந்தது. கந்தசாமி அதை அவசரம் அவசரமாக உடைத்துப் பார்த்தார். அதில்,

**‘அன்புள்ள அத்தான்!**

**நான் அனுப்பும் பணத்தில் நீங்கள் தினசரி குடித்துக் கொண்டிருப்பதாக அறிகிறேன். இந்த மாதத்துடன் எனது ‘கொன்ராக்’ முடிவடைகிறது. எனவே, நான் 1987 ஆம் ஆண்டுப் புதுவருடத்தைக் கொண்டாடுவதற்கு இலங்கை வந்துவிடுவேன். எனவே, தவறாது எயார்ப் போட்டில் எனக்காக காத்து நிற்கவும். நான் எனது மூன்று வருட காலத்தில் குவைத் நாட்டில் உழைத்த ஒன்றரையுடன் வருகிறேன்.**

**இப்படிக்கு,**

**உங்கள் வள்ளி’**

கந்தசாமிக்கு இருப்புக் கொள்ளவில்லை. எனது மனைவி ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்துடன் வருகிறாள். இனி நான் ஒரு லட்சாதிபதி. எதிர் வரும் புத்தாண்டில் நானே லட்சாதிபதி என்று குதூகலித்தார்.

வள்ளி வரும் நாளும் வந்தது. கந்தசாமி ஆவலுடன் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். விமானமும் வந்து சேர்ந்தது. விமானத்தில் வந்தவர்கள் ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டு வெளியே வந்தனர்.

ஆனால், வள்ளியைக் காணவில்லை. நீண்ட நேரத்தின் பின் ஒரு பெண் கந்தசாமியின் அருகே வந்து ‘அத்தான் போகலாமா?’ என்றாள்.

கந்தசாமியால் நம்பவே முடியவில்லை. கண்ணில் போட்டிருந்த கண்ணாடியைக் கழற்றிக் கையிலெடுத்துக்கொண்டு பார்த்தார். ஆம்! அது அவருடைய மனைவி. வள்ளிதான்! இடுப்பிலே ஒரு குழந்தை, வயிற்றினிலே ஐந்து மாதக் குழந்தை.

இதுதானா அவள் ஒன்றரையுடன் வருகிறேன் என்று எழுதியிருந்தது. ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் தனக்குக் கிடைக்காத பாக்கியம் மனைவி மூலமாவது கிடைத்ததே என்று பெருமிதப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் வள்ளியின் கையிலிருந்த குழந்தை கந்தசாமியின் கையில் தாவிக்கொண்டது,

கந்தசாமியோ அதைப் புத்தாண்டுப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

**(முற்றும்....)**

# நண்பரோடு பல நாட்கள்

சினுங்கி சினுங்கி
அழுது தான்
பள்ளி சென்ற
பருவம் போனதே

இன்று ஏனோ
பிரிவு என்ற
வார்த்தை உடன்
வீடு திரும்பும்
பருவம் ஆயிற்றே

நம்மை போன்ற
நண்பர் கூட்டம்
இனியும் இருக்க
மாட்டார்கள்

நாம் செய்த
சின்னச் சின்ன
குறும்புத் தனம்
இன்னும்கூட
நினைவில் வந்து
போகுதே

நண்பன் போல
ஆசானும் எமக்கு
கற்று தந்தார்
பல விடயம்

அழியாத நினைவுகளாய்
இன்றும் எம்முள்
இருக்கிறதே

அன்று தோழியோடு
நடந்த போது
ஆனந்தமாய் இருந்தது
இன்று தனிமையிலே
நடக்கும் போது அந்த
வலி புரிகிறதே



தொப்பூழ் கொடி
உறவும் அல்ல
வேறு எந்த
உறவும் அல்ல
ஆனாலும் வலிக்கிறது

மறக்க முடியாத
பல நினைவுடன்
பிரிந்து நாம்
செல்லும் போதே.

அபி யது

# கைமாறு



தாங்கி உன்னை
வளர்த்திடும் போது
நீ சிந்தும் புன்னகை
ஒன்று போதும் கைமாறு

ஏணியாகி நான்
ஏறிட உன்னைத் தான்
தூண்டி நிற்பேன்
நித்தம் பெற கைமாறு

சத்தம் போட்டு இங்கே
சொந்தம் உன்னை
அழைத்து தான் அன்பை
பொழியாதா கைமாறு

பட்டை தீட்டிய
வைரம் போல உன்னை
ஒளிரச் செய்வேன்
ஒளிர்ந்தால் கைமாறு

எழுந்து நடந்திட
ஊன்று கோல் ஆவேன்
இறுதி வரை உறுதிக்கு
உரமாவேன் கைமாறு

உன்னில் கண்ட
அன்பு ஏனோ இன்று
அணை உடைந்து
பெருக்கெடுக்கும் போது.

நதுநசி

# தீவைச்சூழ அழுக்கு நீர்

மண்டையோட்டைத் திறந்தால்
தீவாய் மூளை அதனைச் சூழ
முற்றிலும் அழுக்கு நீர்
சில துளிப்புக்களும் அங்கே
ஆனால்
ஆரோக்கியமற்றவை
முளைக்கத் தொடங்கு முன்பே
கிள்ளி முடக்கிவிடத்தான்
ஆசை
ஆனால் நான் சற்றுத்
தாமதமாகத் திறந்து விட்டேன்

இரத்தக் கறைகளும்
கழுவி விடத்தான்
துடிக்கின்றேன் தூய நீரோ
ஆழமாய்த் தெரிகின்றது

அடுத்த இளசுகளின்
காலடிகளுக்கு வழிகாட்ட
உறுதி உத்தம் இரத்தம் சதை
நாடி நாளங்களால் இறுகிப்
பிணைக்கப்பட்ட உயிருள்ள
கால்களைக் காணவில்லை
அனைத்தும் இங்கு
செயற்கைக் கால்களாய்




போதைகளின் நாற்றமும்
கீழான சிந்தைகளும்
எனத் தீய துளிர்கள்தான்
முட்டி முட்டிப் பார்த்தவாறு

வெளியே எடுத்து ஒரு முறை
நிலைக்காத விருட்சங்கள்
துளிர்ப்பதுவும் ஏனென்று
பட்ட மரங்கள் உரத்துக்
கேட்கின்றன
விளை நிலத்தில் அழுக்குச்
சூழ்ந்ததால்.



லக்சன்

# அம்மா

அம்மா அம்மா
என சொல்கையில்

உள்ளத்திலே அன்பு ஊற்றாகி
கவியாய் பொழிகிறது

உயிர் எனக்கு தந்தாய்
உயிராக எனை
காத்தாய்

அன்பை எனக்கு பொழிந்தாய்
அன்பாலே எனை
நீ பெற்றாய்

எனை புகழ நீ கவிஞனானாய்
என் மழலை சேட்டைகள்
ரசிக்க ரசிகையுமானாய்

பாலூட்டி எனை சீராட்டினாய்
தாலாட்டி எனக்கு வேரூட்டினாய்

என் நாவின் முதல்
வார்த்தை அம்மா
என் வாழ்வின்
முதல் கவிதை அம்மா.

# உணவுப்பழக்கத்திலும் இருக்கட்டும் ஒழுக்கம்



ஆரோக்கிய உணவுப் பழக்கம் என்பது ஒருவகையான ஒழுக்கம். உணவு சாப்பிடும் நேரத்தில், உணவு இடைவேளையில் அந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும். இரத்தச் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் இருக்கவும் செரிமானம் சீராக இருக்கவும் ஒவ்வொரு 3 - 4 மணி நேரத்துக்கொருமுறை சாப்பிடுவதை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இதை முறையாகப் பின்பற்றினாலே, உடல் பருமன், அஜீரணம், வயிற்று உப்புசம், உணவுத்தேடல், அளவுக்கதிகமாகச் சாப்பிடுவது போன்ற பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

1. சரியான நேரத்துக்குச் சாப்பிடுவதை வழக்கமாக்குங்கள். அது நீங்கள் அளவுக்கதிகமாகச் சாப்பிடுவதைத் தடுக்கும்.

2. எந்தவேளை உணவையும் தவிர்க்காதீர்கள். காலையில் நீங்கள் சாப்பிடுகிற முதல் உணவு, அந்த நாளின் தன்மையைத் தீர்மானிக்கும். 'எனக்கெல்லாம் பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடற வழக்கமே இல்லை...' என்று சொல்லிக் கொள்பவர்கள் குறைந்தபட்சம் சிறிது நட்ஸ், பழம், முட்டை என எளிமையான கார்போஹைதரேட்டும் புரதமும் நிறைந்த உணவுகளையாவது சாப்பிடுங்கள்.

3. இந்தத் தலைமுறையினருக்கு நள்ளிரவில் சாப்பிடும் வழக்கம் அதிகமிருக்கிறது. விடிய விடிய திறந்திருக்கும் உணவகங் கள், நைட் ஷிஃப்ட் வேலை, 24 மணி நேரமும் கிடைக்கும் ஒன்லைன் உணவுகள் என இந்தப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் விடயங்களுக்கும் குறைவில்லை. இரவில் தாமதமாகச் சாப்பிடுவது என்பது உடல் எடையை அதிகரிக்கச் செய்யும்.

பகல் வேளைகளில் ஆரோக்கியமற்ற கொழுப்பு உணவுகளைச் சாப்பிடுவது, நாள் முழுவதும் ஒழுங்காக போதுமான அளவு சாப்பிடாதது போன்றவற்றாலும் சிலர் இரவில் உணவுத் தேடலுக்கு ஆளாவதுண்டு.

இரவில் தாமதமாக உண்ணும் பழக்கம், இரத்தச் சர்க்கரை அளவை அதிகரிப்பது, இதய நோய்கள், பருமன் மற்றும் அசிடிட்டி போன்ற பல பிரச்சினை களுக்கு வழிவகுக்கும். எவ்வளவு தாமதமாகச் சாப்பிடுகிறீர்களோ, அவ்வளவு தாமதமாகத்தான் உங்கள் உடல் உறக்கத்துக்குத் தயாராகும். இதனால் உங்கள் நினைவாற்றலும் அடுத்த நாள் வேலையும் பாதிக்கப்படும்.



4. இரவு உணவுக்கு பிரியாணி, அசைவ விருந்து என பலமாக எதையும் சாப்பிடாதீர்கள். அத்தகைய உணவுகள் செரிமானமாகத் தாமதமாகும். அவற்றிலுள்ள காரம் மற்றும் மசாலா அமிலம் எதுக்களித்து வரும் பிரச்சினையையும் ஏற்படுத்தும்.

5. இரவு உணவுக்கு கீரை சாப்பிடுவதைத் தவிர்க்கவும். பெரும்பாலான வீடுகளிலும் பகலில் சமைத்த உணவுகளின் மிச்சம் மீதியை வீணாக்க விரும்பாமல் இரவில் சாப்பிடும் வழக்கம் இருக்கிறது. அவை செரிமானத்தைப் பாதிக்காத உணவுகளாக இருப்பது சிறப்பு.

6. மிக முக்கியமாக மீந்துபோகும் சட்னி வகைகளை அடுத்தவேளைக்குப் பயன்படுத்தாதீர்கள். பச்சையாக அரைக்கப்படுகிற சட்னி வகைகளை உடனுக்குடன் சாப்பிட வேண்டும். அவற்றை ஃப்ரிட்ஜில் வைத்தோ, அடுத்த வேளைக்கோ சாப்பிடாதீர்கள். அடுப்பில் வைத்து சமைக்காத காரணத்தால் அவற்றில் நுண்ணுயிரிகள் அதிகமிருக்க வாய்ப்புகள் உண்டு.

7. வெளியிலிருந்து வாங்கும் உணவுகளை அடுத்த வேளை வரை வைத்து உண்ணாதீர்கள். சாம்பார், குருமா, சிக்கன் கிரேவி என எதுவாகவும் இருக்கட்டும். அவை, எப்போது தயாரிக்கப்பட்டது என்பது தெரியாததால் அடுத்த வேளைக்கும் வைத்துச் சாப்பிடுவது நல்லதல்ல.

8. எப்போதுமே அந் தந்த வேளைக்கான அளவு மட்டும் சமைத்து, அந்தந்த வேளையே சாப்பிட்டுவிடுவதுதான் சரியானது. வெப்பநிலை அதிகம் உள்ள பகுதிகளில், சமைத்த உணவு சீக்கிரம் கெட்டுவிடும் என்பதால் அவற்றை அடுத்தடுத்த வேளைகளுக்கு வைத்துச் சாப்பிட வேண்டாம்.

சமைத்த உணவை சூடுபடுத்திச் சாப்பிடும் போது அவற்றின் சுவை மாறாமல் இருக்கலாம், ஆனால் சத்துகள் அழிந்துவிடும் என்பதை கவனத்தில் கொள்ளவும். ■

# தேங்காயையும் தேங்காய் எண்ணெயையும் தினசரி சேர்த்துக் கொள்ளலாமா?

தேங்காயோ, தேங்காய் எண்ணெயோ சேர்த்துக்கொண்டால் உடலில் கொலஸ்ட்ரோல் சேரும், கெட்ட கொழுப்பு சேரும் என்றெல்லாம் பிரச்சாரங்கள் செய்யப்பட்டதால் பலரும் பயந்து, தேங்காய் உபயோகத்தையே தவிர்க்கத் தொடங்கினர்.

தேங்காயை தினசரி உணவில் எல்லோருமே சேர்த்துக் கொள்ளலாமா? எந்த அளவில் சேர்க்க வேண்டும்? வாரம் ஒரு மீடியம் சைஸ் தேங்காய் மற்றும் சமையலில் தினம் ஓரிரு டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவது சரிதானா?

தேங்காய் எண்ணெயில் 'மீடியம் செயின் ட்ரைகிளிசரைடு' என ஒன்று இருக்கிறது. அது உடலுக்கு, குறிப்பாக மூளைக்கு மிகவும் அவசியம். தேங்காயிலும் தேங்காய் எண்ணெயிலும் மருத்துவக்குணங்கள் இருப்பதால்தான் நம் முன்னோர்கள் அவற்றை சமையலில் பயன்படுத்தினார்கள்.

அதேநேரம், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கேற்பவே தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயை உபயோகிக்க வேண்டும். அந்த வகையில் தினமும் 2 டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லோருக்கும் கொழுப்புச்சத்து என்பது அவசியம்.



எனவே மற்ற கொழுப்புச்சத்துகளைத் தவிர்த்துவிட்டு, தேங்காய் எண்ணெய் சேர்த்துக் கொள்ளலாம். வெண்ணெயில் உள்ளது போல தேங்காய் எண்ணெயில் உள்ளது கெட்ட கொழுப்பு அல்ல.

தேங்காயில் நிறைய நார்ச்சத்து உள்ளது. அது குடலுக்கு மிகவும் நல்லது. மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு நார்ச்சத்துள்ள உணவுகள் அவசியம். அந்த வகையில் தேங்காய் நல்லது. குடல் புற்றுநோய் வராமலும் காக்கும். நான்குபேர் கொண்ட குடும்பத்தில் வாரத்துக்கு 2 தேங்காய் (மீடியம் சைஸ்) உபயோகிப்பதில் தவறில்லை. ■

# கிளிநொச்சியின்...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதைப் பராமரிக்கிறார் சிறிதரன். இவ்வாறு உருவாகியுள்ள அணிகள் மாவட்டத்தின் நலனைவிட, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதைவிட தத்தமது அரசியல் நிலைப்பாட்டை வலுவாக்கம் செய்வதிலேயே கரிசனை காட்டின.

சிறிதரன் அணி, தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் அரச எதிர்ப்பையும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையையும் முன்னிலைப்படுத்தியது. அரச ஒடுக்குமுறையை எதிர்க்கும் புதிய அரசியல் மாதிரிகளை உருவாக்குவதற்குப் பதிலாக, பழைய - உழுத்துப் போன வழிமுறைகளைப் பின்பற்றியது. அதாவது, கடந்த 60 ஆண்டுகளாக பின்பற்றிய கடையடைப்பு, ஒழுங்கமைக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியற்ற - அழுத்தமாக மாறாத போராட்டங்கள், நினைவு கூர்தல்கள் என இவை அமைந்தன.

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியைப் பேணுவதாக இந்தத் தரப்பினர் சொல்லிக் கொண்டாலும் புலிகள் மேற்கொண்ட சூழல் பாதுகாப்பு, சமூக சமத்துவம், சமூகப் பாதுகாப்பு, ஊழலற்ற தன்மை, நிர்வாகக் கண்காணிப்பு, நிர்வாக நேர்த்தி, மக்கள் அமைப்புகளை மக்கள் நேயத்துடன் இயங்க வைத்தல் போன்றவற்றைச் செய்யவில்லை. அதாவது, புலிகளை வாய்க்கு வாய் பெயரளவில் உச்சரித்தனரே தவிர, அவர்கள் மேற்கொண்ட அரசியல், சமூக வேலைத்திட்ட மாதிரிகளை தொடக்கூட இல்லை.

இதனால் மாவட்டத்தின் நிலை பாதிப்புக்குள்ளானது. ■

# ஐ.எம்.எப் தாண்டி இந்தியாவும் இலங்கையும்

இலங்கைப் பொருளாதாரம் நிலைபெறுவதற்கான அறிகுறிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், இந்திய-இலங்கை உறவுகள் உதவி உறவில் இருந்து இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஓட்டங்களை ஆழப்படுத்தும் உறவுக்கு மாறத் தயாராக உள்ளன.

2022 இன் இருண்ட பொருளாதார நாட்களை இலங்கை பின்னுக்குத் தள்ளுகிறது. அந்த நேரத்தில், அது கடுமையான கொடுப்பனவு நெருக்கடியை எதிர்கொண்டது, மேலும் 2022 ஏப்ரலில் 50 பில்லியன் டொலருக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடனை முற்கூட்டியே திருப்பிச் செலுத்தாததை அறிவித்தது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிக மோசமான பொருளாதாரச் சுருக்கம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 20221 இல் -7.8% குறைந்துள்ளது, ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2022 செப்ரெம்பரில் 69.8% ஐ எட்டியது (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் அளவிடப்படுகிறது), வணிக நம்பிக்கை எப்போதும் இல்லாத அளவிற்கு வீழ்ச்சியடைந்தது மற்றும் வறுமை அதிகரித்தது.

ஒரு வருடத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அடுத்த வருடம் இலங்கையில் மீண்டும் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் 2023 இல் வெளியிடப்பட்ட சமீபத்திய IMF முன்னறிவிப்பு, 2023 இல் -3.1% மற்றும் 20243 இல் 1.5% ஆக குறைந்த கடுமையான பொருளாதாரச் சுருக்கம் மற்றும் வளர்ச்சியைக் குறிக்கிறது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 4 இன் படி ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் ஏப்ரல் 2023 இல் 35.3% ஆக குறைந்தது. LMD-NielsenIQ வர்த்தக நம்பிக்கைச் சுட்டெண் (BCI) 2023 மார்ச் மாதத்தில் சுற்றுலா மற்றும் இலங்கைக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் காரணமாக வர்த்தக நம்பிக்கை சற்று அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய இலங்கை அரசாங்கத்தின் தீர்க்கமான கொள்கைகள் மற்றும் சரியான நேரத்தில் இந்திய உதவிகள் இலங்கையை பொருளாதாரப் படுகுழியின் விளிம்பில் இருந்து மீட்டெடுக்க உதவியது. ஜூலை 2022 இன் பிற்பகுதியில் இருந்து, விக்கிரமசிங்க அரசாங்கம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் பற்றிய பேச்சுக்களை தீவிரப்படுத்தியது மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கையின் கடனாளிகளிடமிருந்து உறுதிமொழிகளைக் கோரியது. உறுதியான பொருளாதார ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளில் சுழல் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கையை கணிசமான அளவில் இறுக்குதல், வரிகளை உயர்த்துதல், எரிபொருள் மற்றும் மின்சார மானியங்களை நீக்குதல் மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உட்பட நட்டத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான தனியார்மயமாக்கல் திட்டத்தை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

இந்தியா தனது வரலாற்றில் எந்தவொரு நாட்டிற்கும் மிகப்பெரிய இருதரப்பு உதவிப் பொதியை வழங்கியதில்லை. 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சுமார் 4 பில்லியன் டொலர்கள் இந்திய உதவி இலங்கைக்கு கடன்கள், கடன்கள் மற்றும் மானியங்கள் மூலம் கிடைத்தது. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கான வழக்கை உருவாக்க இந்தியாவும் திரைமறைவில் இராஜதந்திரத்தை தீவிரமாகப் பின்பற்றியது. ஜூலை 2020 இல், கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க, இந்திய ரிசர்வ் வங்கியானது, 400 மில்லியன் டொலர் குறுகிய கால நிதியுதவியை வழங்குவதற்காக, இலங்கை மத்திய வங்கியுடன் நாணய மாற்று ஏற்பாட்டில் நுழைந்தது. இந்தியாவின் உதவி முயற்சிகள் இலங்கை மக்களைப் பாதிக்கும் மனிதாபிமான நெருக்கடி மற்றும் தென்னிந்தியாவின் அரசியல் அழுத்தங்களால் உந்துதல் பெற்றன.

பணியாளர்கள் அளவிலான ஒப்பந்தத்தை எட்டிய சில மாதங்களுக்குப் பிறகு, மார்ச் 2023 இல் IMF வாரியம் இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் முயற்சிகளுக்கு ஆதரவாக 48 மாதங்களில் 2.9 பில்லியன் டொலர் IMF திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. இலங்கையின் வரலாற்றில் 17 ஆவது மற்றும் கடினமான சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டமானது முடமான பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரு மைல்கல்லாகும். வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்தி, பின்வரும் ஆறு இலக்குகளை அடைய முயல்கிறது:

1. வரி வருமானத்தை அதிகரிக்கவும் மற்றும் பயன்பாட்டு விலைகளை அதிகரிக்கவும்
2. வட்டி விகிதங்களை உயர்த்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்
3. பண நிதியளிப்பை நீக்குதல் மற்றும் சுதந்திரமான மத்திய வங்கியை உருவாக்குதல்
4. நெகிழ்வான மாற்று விகிதத்தின் மூலம் இருப்புக்களை மீண்டும் உருவாக்குதல்
5. புதிய வங்கிச் சட்டத்தை இயற்றுவதன் மூலம் போதுமான அளவு மூலதனமாக்கப்பட்ட வங்கிகளை உறுதி செய்வதன் மூலம் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல்
6. சிறந்த நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி மேலாண்மை மூலம் ஊழல் அபாயங்களைக் குறைத்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் வெளிப்புற நிதியுதவியானது IMF திட்டத்திலிருந்து $ 333 மில்லியன் உடனடியாக வழங்கப்படுவதைத் தொடர்ந்து. ஒரு வலுவான இலங்கைப் பொருளாதாரம், பிரதமர் மோடியின் அண்டை நாடு முதல் கொள்கைக்கு ஒரு பெரிய வெற்றியாக அமையும் மற்றும் வளர்ந்து வரும் நன்கொடையாளராக சீனாவை இந்தியா திருட முடியும். தனியார் இந்திய முதலீடு




கள் முத்திரை பதிக்கத் தொடங்கியுள்ளன. இலங்கையில் அதானி குழுமத்தின் 1 பில்லியன் டொலருக்கும் அதிகமான அண்மைய கண்ணைக் கவரும் முதலீடுகள் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ளன. அவற்றில் பின்வருவன அடங்கும்: மன்னார் படுகையில் இரண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி காற்றாலை மின் நிலையங்களில் $ 442 மில்லியன் மற்றும் அதானி இடையே $ 700 மில்லியன் கூட்டாண்மை,

இருதரப்பு ரீதியாகவும் இத்தகைய இந்திய உட்கட்டமைப்புத் திட்டங்கள் இலங்கைக்கு மாற்றத்தை ஏற்படுத்தும், மூலதனத்தை மட்டுமல்ல, தொழில்நுட்பம் மற்றும் திறன் பரிமாற்றத்தையும் கொண்டு வருவதோடு, இலங்கைப் பொருளாதாரத்துடன் உள்ளூர் தொடர்புகளை ஆழப்படுத்தும். இத்தகைய முதலீடுகள் அடுத்த சில வருடங்களில் இலங்கையில் விவசாயச் செயலாக்கம், ஜவுளி மற்றும் இலகு உற்பத்தி மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற துறைகளில் 5-8 பில்லியன் டொலர் கூடுதல் இந்திய தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கும்.

அதேசமயம், ஆடை தயாரிப்பு நிறுவனமான Brandix, தேயிலை நிறுவனமான Dilmah மற்றும் கூட்டு நிறுவனமான John Keells Holdings போன்ற இலங்கை நிறுவனங்களை உலகமயமாக்குவது தென்னிந்திய மாநிலங்களில் ஜவுளி, உணவு பதப்படுத்துதல் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் முதலீடு செய்ய வேண்டும். இரு தரப்பிலும் நம்பிக்கையுடன், இந்தியாவும் இலங்கையும் இருதரப்பு அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு சிறந்த சந்தைப்படுத்தல், FDI நுழைவு விதிமுறைகளைத் திறந்து, டிஜிட்டல் மயமாக்கல் மூலம் முதலீட்டைத் தடுக்கும் சிவப்பு நாடாவைக் கணிசமாக ஒழுங்குபடுத்துவதற்கான நேரம் இது. பிராந்திய விதிகள் அடிப்படையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக ஆழமான இந்திய-இலங்கை வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை விரைவில் தொடங்குவது இருதரப்பு உறவுக்கும் மகுடம் சூட்டும். அரசியல் விருப்பம் மற்றும் திறந்த கதவு, முதலீட்டாளர் நட்பு கொள்கைகளுடன், இலங்கை இப்போது அடுத்த மூன்று ஆண்டுகளில் சில பொருளாதார இயல்பு நிலையை அடைவதற்கான ஒரு விளையாட்டு வாய்ப்பாக உள்ளது. ■

# பீலேயின் நினைவகம் திறக்கப்பட்டது

உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலேக்கு சாண்டோஸில் அர்ப்பணிக்கப்பட்ட கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டது. பீலேயின் குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

பீலே சாண்டோஸுடன் 18 ஆண்டுகள் விளையாடிய விலா பெல்மிரோ ஸ்டேடியத்தின் இரண்டாவது மாடியில் கலசம் வைக்கப்பட்டுள்ளது. சமாதிக்குச் செல்வதற்கு முன், ஆன்லைனில் சந்திப்பது அவசியம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நான்கு உலகக்கிண்ணப் போட்டிகளில் பீலே விளையாடினார். 1958 இல், அவரது 18 ஆவது பிறந்தநாளுக்கு முன், அவர் சுவீடனுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்தார், பிரேஸில் 5-2 என்ற கணக்கில் வென்றது. 1962 இல், அவர் ஒரு குழு போட்டியில் காயமடைந்தார். பிரேஸில் கோப்பையை தக்க வைத்ததால் இறுதிப் போட்டியில் விளையாடவில்லை.

1966 ஆம் ஆண்டில், போர்த்துக்கலுக்கு எதி ரான பிரேஸிலின் குழுப் போட்டியில் அவர் எதிரணியின் வீரர்களால் கொடூரமான முறையில் நடத்தப்பட்டார்.

1970 இல் மெக்சிக்கோவில் நடந்த போட்டியில், பிரேஸிலின் மூன்றாவது உலகக் கோப்பை வெற்றியின் நாயகனாக இருந்தார்.



இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில், உலகக் கோப்பை கால்பந்தில் பிரேஸிலின் 100 ஆவது கோலை அடித்தார்.

பீலே 1971 இல் சர்வதேச அணியில் இருந்து ஓய்வு பெற்றார், ஆனால் தொடர்ந்து கிளப் போட்டிகளில் விளையாடினார்.

பிரேஸில் சீருடையுடன் இரண்டு கிளப்புகளின் சீருடைகளும் நினைவகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவர் ஒருபோதும் ஒலிம்பிக்கில் விளையாடியதில்லை, ஆனால் 2004 இல் ஒலிம்பிக் சுடரை ஏற்றிச் செல்ல அழைக்கப்பட்டார், மேலும் 2016 இல் பிரேஸிலைச் சுற்றிய பயணத்தின்போது மீண்டும் அவ்வாறு செய்தார், இருப்பினும் அவர் மிகவும் பலவீனமாகிவிட்டார். கான்சருக்கு எதிரான நீண்ட போராட்டத்திற்குப் பிறகு டிசம்பர் இறுதியில் பீலே தனது 82 ஆவது வயதில் இறந்தார். கடந்த மாதம் ஒரு பொது பிரச்சாரத்திற்குப் பிறகு அவரது பெயர் பிரேஸிலிய அகராதிகளில் "தனித்துவம்" என்ற வார்த்தையின் உருவகமாக சேர்க்கப்பட்டது. பீலேவின் மகன் சோல்பி டோநாசி மெண்டோ தனது தந்தைக்கு அர்ப்பணிக்கப்பட்ட சமாதியில் உணர்ச்சிபூர்வமான அர்ப்பணிப்பு விழாவில் கலந்து கொண்டார். ■

# 2026 உலக்கிண்ண உதைபந்தாட்ட இலட்சணை வெளியீடு




அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகள் இணைந்து 2026 ஆம் ஆண்டு நடத்தும் உலகக்கிண்ண உதைபந்தாட்ட இலட்சணை கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள க்ரிஃபித் அப்சர்வேட்டரியில் பீபா தலைவர் கியானி இன்ஃபான் டினோ இலட்சணை வெளியிட்டார்.

அனுசரணையாளர்களான Fox Sports, Telemundo Deportes ஆகிய ஒளிபரப்பாளர்களும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இலட்சணையில் தடிமானமான தொகுதி '2' மற்றும் '6' எண்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கும், பீபா உலகக்கிண்ணம், பீபா வேர்ட்மார்க் ஓவர்டாப். இது முக்கியமாக கறுப்பு பின்னணியில் வெள்ளை நிறத்தில் எண்களுடன் தோன்றும், ஆனால் இது பரந்த அளவிலான பின்னணி வண்ணங்களுக்கு மாற்றியமைக்கப்படலாம். பிரதான இலட்சணையைத்தவிர, போட்டியை நடத்தும் ஒவ்வொரு நகரங்களும் தனித்துவமான இலட்சணையைக் கொண்டிருக்கும். ■

# காலிறுதியில் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி




நம்பர் 1 வீரரான செர்பியாவின் ஜோகோவிச் இத்தாலியன் ஓபன் காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்து போட்டியில் இருந்து வெளியேறியுள்ளார்.

இத்தாலியன் ஓபன் டென்னிஸ் போட்டி ரோம் நகரில் மே 8 ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்களும் வீராங்கனைகளும் இந்தப் போட்டியில் பங்கெடுத்து விளையாடி வருகின்றனர். நம்பர் 2 வீரர் அல்காரஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 3-6, 6-7, (4-7) என்ற நேர் செட் கணக்கில் ஹங்கேரி வீரர் பாபியன் மாரோஸ்சனிடம் தோல்வி அடைந்து வெளியேறிவிட்டார். நம்பர் 1 வீரர் செர்பியாவின் ஜோகோவிச்சும் ரேஸில் இருந்து வெளியேறியுள்ளார்.

இத்தாலியன் ஓபனில் தொடர்ந்து 17 ஆவது முறையாக காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற ஜோகோவிச், 7 ஆவது இடத்தில் உள்ள டென்மார்க் வீரர் ஹோல்கர் ருனேவை எதிர் கொண்டார்.

22 முறை கிராண்ட்ஸ்லாம் வென்றவரான ஜோகோவிச், முதல் செட்டிலேயே 2-6 என்ற கணக்கில் பறிகொடுத்தார். பின்னர், தனது சாதுரியமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர், 6-4 என்ற கணக்கில் அடுத்த செட்டைக் கைப்பற்றினார். இதனால், ஆட்டத்தில் சூடுபறந்தது. பின்னர் 3 ஆவது செட்டில் வீறுகொண்டு எழுந்த ருனே 6-7 என்ற கணக்கில் எளிதில் கைப்பற்றி ஜோகோவிச்சை வீழ்த்தினர். இவ்வாறாக, 6-2, 4-6, 6-5 என்ற செட் கணக்கில் 20 வயது இளைஞரான ருனே கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான வீழ்த்தி அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். ஜோகோவிச்சின் தோல்வியை எதிர்பாராத அவரது ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். முன்னதாக, காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் கேமரூன் நோரியை 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றிருந்தார் ஜோகோவிச். டென்மார்க் வீரர் ருனே, போட்டித் தரவரிசையில் 4 ஆவது இடத்தில் உள்ள நோர்வே வீரர் காஸ்பர் ருடை சனிக்கிழமை எதிர் கொள்கிறார்.

இதே போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக், குரோஷிய வீராங்கனை டொன்னாவை 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழை ஸ்வியாடெக் அந்த சுற்றில் தோற்று வெளியேறினார். காலிறுதியில் கஜகஸ்தானைச் சேர்ந்த போட்டித் தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள எலெனாவை சந்தித்த அவர், மூன்றாவது செட்டில் வலதுகால் தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியில் இருந்து பின் வாங்கினார். இதனால், ஆட்டம் அத்துடன் நிறுத்தப்பட்டு, எலெனா வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டார். எலெனா, அரையிறுதியில் லாத்வியா வீராங்கனை ஜெலனாவை எதிர்கொள்கிறார். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 20.05.2023 அன்று வெளியிடப்பட்டது.